Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 28 புதன்கிழமை (11.02.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 134

## சம்பந்தனை கண்டித்து யாழில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன.

இந்த சுவரொட்டிகளை நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் காணக்கூடியதாக இருந்தது.

"போலி தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளே" எனக்குறிப்பிடப்பட்டு ஒட்டப்பட்டுள்ள அந்த சுவரொட்டிகள், கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 67ஆவது சுதந்திரதின நிகழ்வில் இருவரும் கலந்துகொண்டதைக் கண்டித்து ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் என சுவ ரொட்டியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. (63)

## வீதி விபத்தில் குடும்பஸ்தர் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - மீசாலையில் நேற்று இரவு இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் சிக்கி குடும் பஸ்தர் ஒருவர் மரணமடைந் துள்ளார்.

இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் அல்லாரையைச் சேர்ந்த குமார வேலு சிவநேசன் (வயது-61) என்பவரே மரணமடைந்துள்ளார். இவரது சடலம் சாவகச்சேரி மருத்துவ மனையில் நேற்று இரவு வைக்கப்பட்டிருந்தது. பொலிஸார் விசாரணை மேற் கொண்டுவருகின்றனர். (இ)

## முஸ்லிம் காங்கிரஸ் அல்-கொய்தாவுடன் தொடர்பு

### பொதுபலசேனா சீற்றம்

அல் - கொய்தா தீவிரவாத அமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக் கீமுக்கு தொடர்பு உண்டு என பொதுபலசேனா அமைப்பு தெரி வித்துள்ளது.

இதனை அமைப்பின் பேச்சா ளர் டிலந்த விதானகே நேற்று கிருலப்பனையில் நடந்த ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,



அண்மையில் நாட்டில் நடந்த முரண்பாட்டுக்கு காரணம் பொது பலசேனாவே என்று ஐக்கிய

19 ஆம் பக்கம் பார்க்க

# எம்மை ஏமாற்ற நடக்கிறது சதி

### மாகாண அமர்வில் விக்கி



(யாழ்ப்பாணம்)

புதிய அரசில் எம்மை ஏமாற் றும் சதிகள் நடக்கின்றன. "பழைய குருடி கதவைத்தி றடி" என்ற நிலைக்கே நாங்கள் தற்போது வந்துள்ளோம் அத ற்கு மத்திய அரசுக்கு அனுசர ணையான விதத்தில் நடந்து கொள்ள விரும்புகிறது. அமெ ரிக்கா என வடமாகாண முதல மைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வடமா காணசபையின் 24 ஆவது அமர் வின் போது இனப்படுகொலை தொடர்பான பிரேரணையை முன்மொழிவதற்கு முன்பாக தமி ழில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் உவந்து ஒரு அரசாங் கத்தை உருவாக்கிவிட்டு அதனை உரசிப்பார்ப்பது போல் இந்தப் பிரேரணை அமையாதா? என பலர் கேட்பார்கள் உண்மையை உரைப்பதற்கு நேரகாலங்கள் தேவையில்லை. அத்தீர்மா னத்தை கொண்டுவர வேண்டிய நல்ல நேரம் இதுதான்.

அண்மையில் ருவான் விஜே வர்தன இராணுவத்தினரை சந் தித்து உங்கள் முகாம் ஒன்றினை யும் நாம் அகற்றப்போவதில்லை என்று உறுதியளித்துள்ளார். இன்றைய மாமன் கூறி மருமகன் மதித்துரைத்த கருத்தே இது. நான் ரணில் விக்ரமசிங்காவை சந்தித்த போது, "நாங்கள் மகா நாயக்க தேரர்களிடம் வடமா காண இராணுவ முகாம்கள் எதனையும் அகற்றப்போவ தில்லை என உறுதியளித்துள் ளோம் எனக் கூறி அவரின் மாம னார் ஜே.ஆர். ஜயவர்த்தனா போன்று சிரிக்காத அவர் கொஞ்சம் சிரித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மைத்திரியுடன் ஈ.பி.டி.பி. உயர்மட்டக் குழு சந்திப்பு



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை சந்தித் துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் மேற்படி சந் திப்பு நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது தமிழ் மக்கள் முகங் கொடுத்து வருகின்ற நாளாந்த பிரச்சினைகள் மற் றும் சமகால, எதிர்கால அரசியல் நிலைவரங்கள் என்பன குறித்து பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங் கள் இடம்பெற்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை தொடர்ச் சியாக சந்தித்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உயர்மட்டப் பிரதிநிதிகள் நேற்றைய தினமும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக் கது.

ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோ ருடன் 16 கோரிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தகால மரணங்கள் கண்டித்து தீர்மானம்

### வடமாகாணசபையில் நேற்று

வடக்கு மாகாண சபை உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் கடந்தவருடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை, நீண்ட இழுபறிக்குப் பின்னர் நேற்று அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவு டன் தீர்மானமாகியது. வடக்கு மாகாண சபையின் 24ஆவது அமர்வு கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் பேர வைச் செயலகக் கட்டடத் தொகு தியில் நடைபெற்றது.

இந்த அமர்வில் சிவாஜிலிங் கத்தின் பிரேரணையை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வ ரன் சமர்ப்பித்து உரையாற்றினார். சட்டநடைமுறைகளை எதிர்கொள் ளும் வகையில் குறித்த பிரே ரணை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், சிங்கள, தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் அந்தப் பிரேரணை விரைவில் தமிழ்,

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று முல்லைத்தீவுக்கு விஜயம்

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் நெசர்பீ பிரபு தலைம யிலான பிரதிநிதிகள் குழுவினர் முல்லைத்தீவிற்கு விஜயம் செய் துள்ளனர்.

முல்லைத்தீவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத் திற்கும் பிரித்தானியப் பிரதிநிதிகள் விஜயம் செய்துள்ளனர்.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் ஜெனரல்

19 ஆம் பக்கம் பார்க்க

## தனித்து போட்டியிட பொன்சேகா முடிவு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித் துப் போட்டியிட முடிவு செய்துள்ளதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுக் காலை நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு

19 ஆம் பக்கம் பார்க்க



## சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்; மாகாணசுகாதார அமைச்சுக்கு முன்பாக

யாழ். மாவட்ட சமூக சுகா தார தொண்டர்கள் தமக்கு நிரந் தர நியமனம் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

வடமாகாண சுகாதார அமைச சர் ப.சத்தியலிங்கத்தின் அலு வலகத்தின் முன்பாக நேற்றுக் காலை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 232 சுகாதார தொண்டர்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக

19 ஆம் பக்கம் பார்க்க



## வைத்தியசாலைகளில் குருதி தட்டுப்பாடு; கிளிநொச்சியில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இரத்த வழங்குனர்களை ஊக்குவிக்கும் வகையிலும் நேற்று கிளிநொச்சியில் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் குறித்த முகாம், கிளிநொச்சி வைத்திய சாலையின் உதவியுடன் கனகபுரம் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த இரத்ததான முகாமில் நிறுவன ஊழியர்கள், பொது மக்கள் என பல்வேறுபட்ட மக்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை 9.00 மணி முதல் 2.00 மணிவரை ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த இரத்ததான முகாமில், காலை 11.00 மணிவரை 60 இற்கு மேற்பட்டோர் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (29)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் புதிய கட்டடம் திறந்து வைப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புதிய கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காலை 10.00 மணியளவில் உள்நாட்டலுவல்கள் மற்றும் மீன்பிடி அமைச்சர் யோசப் மைக்கல் பெரேராவினால் இப் புதிய மாவட்டச் செயலகக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது.

இத்திறப்பு நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், விநோநோகராகலிங்கம் மற்றும் உள்நாட்டு அமைச்சின் செயலாளர், அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

அரங்க நிகழ்வில் தொடக்கவுரையினை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் நிகழ்த்தினார். முதன்மை விருந்தினர் உரையினை உள்நாட்டு மீன்பிடித்துறை அமைச்சர் யோசப் மைக்கல் பெரேரா நிகழ்த்தினார். அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்றினர்.

முல்லைத்தீவில் மீள்குடியேற்றம் நடைபெற்ற பின்னர் அரச நிகழ்வொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ரூபா.220 மில்லியன் செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ரூபா 250 மில்லியன் செலவில் மிகுதி மாவட்டச் செயலக வேலைகள் இடம்பெறவுள்ளதாகவும் இன்றைய தொடக்கவுரையில் மாவட்டச் செயலர் தெரிவித்திருந்தார். (160)

## நியமனம் வழங்கலில் தவறவிடப்பட்ட தொண்டர் ஆசிரியர் மனுக்கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினை திறந்து வைக்க நேற்று வருகை தந்திருந்த உள்நாட்டலுவல்கள் மற்றும் மீன்பிடி அமைச்சர் யோசப் மைக்கல் பெரேராவிடம் முல்லைத்தீவு கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களும், இறுதியாக நியமனம் வழங்கப்பட்டபோது தவறவிடப்பட்ட 34 தொண்டர் ஆசிரியர்களும் இரு மணித்தியாலங்களாக வெயிலுக்குள் காத்திருந்து மனுக் கையளித்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கு வழங்கப்படும் வேதனத்தை அதிகரித்து நிரந்தர நியமனம் வழங்குமாறும், தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கும்படியும் மனுக்கையளித்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள், தாங்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக முன்பள்ளிகளில் கற்பித்து வருவதாகவும் நீண்டகாலமாக வேதனம் வழங்கப்படவில்லையெனவும் தற்போது தான் ரூபா.3000 வழங்கப்படுவதாகவும் தெரிவித்ததுடன், எந்த ஒரு அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் முன்பள்ளி ஆசிரியர்களைக் கவனிப்பதில்லை. அதன் காரணமாகத்தான் இப்போராட்டத்தினை நடாத்துகின்றோம் எனவும் தெரிவித்தனர்.

மனுக்களைப் பெற்றுக்கொண்ட அமைச்சர், முதற் தடவையாக முல்லைத்தீவுக்கு விஜயம் செய்திருப்பதாகவும், இந்த பிரச்சினை தொடர்பான விபரங்கள் தனக்கு தெரியவில்லையெனவும், மனுவின் அடிப்படையில் இது தொடர்பான விபரங்களை திரட்டி ஆக்கபூர்வமான பதிலை வழங்குவதாக கூறிச் சென்றார். (160)

## ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள இயக்க நடவடிக்கை

(இத்தாவில்)

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட இத்தாவில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள அமைத்து சொந்தக் கட்டடத்தில் நடைபெற வைப்பது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பளை சுகாதார வைத்தியதிகாரி மைதிலி சிவானந்தன் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக முழுமையாக அழிவடைந்த நிலையில் காணப்படும் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அழிவுகளுக்கு முன்னர் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு சேவையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1134

திகதி 09.02.2015

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

06 07 47 55 R

ஜக்பொட் பரிசு ரூ. 1,27,95,480/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,27,95,480/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 250 | 1,000/= | ரூ. 2,50,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 439 | 1,000/= | ரூ. 4,39,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11518 | 60/= | ரூ. 6,91,080/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6017 | 40/= | ரூ. 2,40,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151278 | 20/= | ரூ. 30,25,560/= |
| ஆங்கில எழுத்து | 21952 | 20/= | ரூ. 4,39,040/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,585,360/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 13,091,340/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.12 ஆ ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3817)


## முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில்
## பதில் கடமை ஊழியர் இன்மையால் பொதுமக்களின் சேவைகள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பிரிவு ரீதியாகக் கடமையாற்றும் அரச ஊழியர்களின் விடுமுறை காலத்தில் பதில் ஊழியர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் தமது தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக பிறப்பு, இறப்பு பதிவதிலேயே இத்தகைய நெருக்கடி நிலை காணப்படுவதாகவும், இப்பிரிவுகளில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் தமது விடுமுறை காலத்தில் பதில் ஊழியரை நியமிக்காது செல்வதால் பிறப்பு, இறப்புச் சான்றிதழைப் பெறுவதில் மக்கள் சொல்லணாத் துன்பங்களை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவுகளுக்கே நாளாந்தம் அதிகளவில மக்கள் வருகை தருகின்ற நிலையில் குறித்த பிரிவுக்கு ஊழியர் இல்லாமையால் சான்றிதழைப் பெறவரும் மக்கள் தாம் அலைக்கழிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

பிறப்பு, இறப்புச் சான்றிதழை அவசர தேவை நிமித்தம் பெறச் சென்றால் அங்கு ஊழியர் இனறிக் காணப்படுவதாகவும், மறுநாள் சென்றாலும் அதேநிலை காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஊழியர்களுக்கு விடுமுறை என்பது தேவையாவுள்ள போதி லும் தமது விடுமுறை காலப் பகுதியில் பதில் ஊழியர்களை நியமித்துவிட்டுச் சென்றால் பொதுமக்கள் இவ்வாறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வராது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள இத்தகைய நிலையால் இப்பிரதேச மக்கள் வவுனியா மாவட்ட செயலகத்திற்குச் செல்வதாகவும். அங்கும் இவ்வாறான நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் அரச ஊழியர்கள் சிறிதளவேனும் 'தமது கடமைகள் குறித்தும், மக்களின் நலன் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். (67)

## போதைப்பொருள் விழிப்புணர்வு

(அல்லைப்பிட்டி)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் தரம் 10, 11 மாணவர்களுக்கு போதைப்பொருள் சார்ந்த விவகாரங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் நேற்றைய தினம் நடத்தப்பட்டது.

# நிலத்தடி நீரில் கழிவுஎண்ணெய் நிபுணர் குழுவால் ஆய்வு ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், தெல்லிப்பளை பிரதேசங்களில் உள்ள நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது தொடர்பாக விரிவான விஞ்ஞான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது தொடர்பாகப் பூரணமான ஆய்வு ஒன்றை நடாத்துவதற்கு வடக்குமாகாண முதல்வரின் பணிப்பின் பேரில் நிபுணர் குழு ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்கள் இக்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

நிலத்தடி நீரில் கலந்துள்ள எண்ணெய் மாசுக்கான சரியான மூலத்தை அடையாளம் காண்பது, நீரில் கலந்துள்ள மாசுக்களின் வகைகளையும் அளவுகளையும் கண்டறிவது, எண்ணெய மேலும் பரவுவதைத் தடைசெய்வது, நீரைத் தூய்மைப்படுத்துவதற்கான பொருத்தமான வழிமுறைகளைப் பரிந்துரை செய்வது போன்றவற்றை ஆய்வின் இலக்குகளாகச் கொண்ட நிபுணர்குழு, ஆய்வின் முதற்கட்டமாகத் திட்டவரைவுகளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

அது முற்றுப்பெற்ற நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர்மாதிரிகளைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆய்வில் துல்லியமான அளவீடுகளைப் பெறுவதற்கும் ஆய்வின் முடிவுகளைச் சட்டரீதியான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கு அமைவாக நிபுணர் குழு, கொழும்பில் அமைந்துள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் உதவிகளை நாடியிருந்தது. இதையடுத்து ஆய்வு உபகரணங்கள் சகிதம் வருகை தந்திருந்த கைத்தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வாளர்களின் உதவியோடு இம்மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

நீர் மாதிரியைச் சேகரிப்பதில் நிபுணர் குழுவோடு தரவுகளைப் பதிவு செய்யும் உதவியாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறை மாணவர்களும் ஈடுபட்டிருந்தனர்.

இந்நீர்மாதிரிகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், தொண்டமானாற்றில் அமைந்துள்ள வடமாகாண நீரியல் ஆய்வு மையத்திலும் இது தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# அலெக்ஸ் பரந்தாமனின் இருநூல்கள் வெளியிடப்பட்டன



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இருநூல்கள் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. எழுத்தாளர் அலெக்ஸ் பரந்தாமனின் 'அழுகைகள் நிரந்தரமில்லை' சிறுகதைத்தொகுப்பு, 'மரண வலிகள்' கவிதைத் தொகுப்பு ஆகிய இரு நூல்களும் கடந்த 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய முதல்வர் க.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.சேய்சோதிகாந்தன் கலந்து கொண்டார். இரு நூல்களையும் நிகழ்வின் முதன்மை விருந்தினர் வெளியிட்டுவைத்தார். நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளும் இடம் பெற்றதுடன், இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், கலைஇலக்கிய ஆர்வலர்கள் எனப்பெருமளவானோர் கலந்துகொண்டனர். (160)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் அழகியல் பாடத்தை ஆரம்பிக்க வேண்டும்

## கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அழகியற் பாடகற்கை நெறியை மீள ஆரம்பிக்கவேண்டியது அவசியம் என கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கல்வியியற் கல்லூரியில் கற்பிக்கப்பட்டு வந்த அழகியல் கற்கைநெறி கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கற்கை நெறியை கற்பதற்கு மாணவர்களும் வளங்களும் போதியளவு இருந்தும் கற்கைநெறி நிறுத்தப்பட்டுள்ளது.



ஆரம்பக்கல்வி, தமிழ், ஆங்கில மொழிகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் விசேட கல்வி ஆகிய 7 கற்கை நெறிகளே தற்போது கற்பிக்கப்படுகின்றன.

கடந்த 21 ஆம் திகதி புதிதாக 14 விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதனால் தற்போதுள்ள பாடங்களுக்கு விரிவுரையாளர் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நடனம், சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும், இந்து நாகரிகம், கிறிஸ்தவம் ஆகிய பாடங்கள் தற்போது இல்லை.

189 மாணவர்களில் 165 பெண் ஆசிரிய மாணவர்களும், 34 ஆண் ஆசிரிய மாணவர்களும் தற்போது கல்வி பயின்று வருகின்றனர் என தெரிவித்தார்.

# வாள்வெட்டுடன் தொடர்புடையவர் ஆட்பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுமதியளித்தார்.

சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் கடந்த சனிக்கிழமை வீட்டிலிருந்தவரை வெளியில் அழைத்த அறுவர் கொண்ட குழுவினர் வாள்வெட்டை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான செல்வராசா உதயராசா (வயது 34) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், வாள் வெட்டுக்கு இலக்கான நபரின் வீட்டில் தங்கியிருந்த ஒருவரை கைது செய்து நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆஜர்படுத்தினர். சந்தேக நபர் சட்டத் தரணியூடாக பிணை வழங்குமாறு கோரியதையடுத்து நீதவான் பிணை வழங்கினார்.

# விளக்கமறியலில் வைக்க உத்தரவு

பெண்ணொருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கச்சாய் வீதியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் ஏற்பட்ட தகராறு காரணமாக, சந்தேகநபர் பெண் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில், காயமடைந்த பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விசாரணைகளை முன்னெடுத்த கொடிகாமம் பொலிஸார், சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான், குறித்த நபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



மக்கள் கலைஇலக்கிய பெருமன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் அமரர் எஸ்.பொன்னுத்துரையின் (எஸ்.பொ.) நினைவஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அமரர் பொன்னுத்துரைக்கு அஞ்சலி செலுத்துவதையும், கவிஞர் சோ.பத்மநாதன், மற்றும் எஸ்.பொ.வின் சகோதரர் ச்.சரவணமுத்து ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட இலக்கிய ஆர்வலர்களையும் காணலாம். (68,105)

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாழ்க்கை என்னும் கொடை!

பழையபடி வாள்வெட்டுச் செய்திகளை அதிகம் பத்திரிகைகளில் பார்க்க முடிகிறது. பட்டப்பகல் தெருக்களில் இளைஞர்கள் வாள்களுடன் துரத்திச் செல்லும் காட்சிகளை அவை விவரிக்கின்றன. அவற்றைத் தடுக்க வேண்டியவர்கள் எங்கே என்பது ஒரு புறமிருக்க, இளைய சமூகம் இவ்வளவு வன்முறையுடன் வளர்வது அலட்சியமுடன் விட்டுவிட முடியாத விஷயமாகிறது.

இங்கு மட்டுமல்ல நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் இத்தகைய, இதைவிடக் குரூரமான செய்திகள் இப்போது அதிகம் கிடைக்கின்றன. இளைய மனங்களின் திரிபும் விரக்தியும் எதிர்காலம் குறித்து கவலை கொள்ள வைக்கின்றன.

புறச்சூழலின் குரூரத்தினால் சிதைக்கப்பட்டு, மனித மனங்களிலிருந்து அன்பு, கருணை, சக மனிதர்களிடமான நேசம், வாழ்வின் மீதான நம்பிக்கை என்பன இப்படித் தொலைந்து போவது குறித்துப் பதற்றமே உண்டாகிறது.

அன்பை உதறிவிட்டு மனதினுள் ஆழமான காழ்ப்புணர்வுகளை நிரப்பிக் கொள்கிறோமோ என்று அச்சப்படாமலிருக்க முடியவில்லை. அன்பையும் அடுத்தவரைச் சகிப்பதையும் தொலைத்துவிட்ட பின்னால் வாழ்வில் நம்பிக்கை கொள்ள மிச்சம் என்ன இருக்க முடியும்?

வாழ்க்கையின் மீது பிடிப்பும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையும்தானே இளமையின் சொத்து! எவ்வளவோ சாதிக்கவும், கற்றுக் கொள்ளவும் துடிப்புடனிருக்கும் இளைய பருவம் சிதைய அனுமதிப்பது இந்த சமூகத்தினுடைய குறைபாடுதான்.

விரக்தியும் வெறுப்பும் விரோதமுமான மனநிலையையே உருவாக்கித் தந்துகொண்டிருக்கும் சமூகப் பெரியவர்கள், ஊடகங்கள், மதப் பெரியவர்கள் எல்லோருமேதான் குற்றவாளிகள். இவர்கள் உருவாக்கி வைத்துள்ள இந்தச் சூழல்தான் குற்றங்களுக்கு அச்சப்படாத இளைஞர்களையும் உருவாக்கி விடுகிறது.

வெறுப்புணர்வுகளை வளர்த்து விட்டுக் கொண்டிருப்பதுதான் இளைஞர்களைத் தவறான வழிகளுக்குத் தள்ளுகிறது. கஷ்டங்களைச் சொல்லி யார் யாரிடமோ அனுதாபம் வேண்டி அழுது கொண்டிருப்பதில் லாபமில்லை. நம்முடைய பிரச்சினைகளை நாம் சமாளிக்க விரும்பினால் நிறைவான அளவில் நம்பிக்கையும் உறுதியுமே தேவையாக இருக்கிறது.

நம்பிக்கையும் உறுதியோடும் சாதித்தவர்களை இளையோருக்குத் திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்தும் தேவை இருக்கிறது.

இசைமேதை பீதோவன் சாகாவரம் பெற்ற ராகங்களை செவிடாக இருந்த நிலையில்தான் உருவாக்கினார். கவிஞர் மில்டன் 'இழந்த சொர்க்கம்' காவியத்தை கண்பார்வையற்ற நிலையில்தான் எழுதி முடித்தார். அலெக்ஸாண்டர் போப் இருக்கையை விட்டு எழுந்து நடக்க முடியாதவர்; ஆங்கில இலக்கியத்தில் மிகப் பெரிய சாதனைகளை அவர் படைத்தார்.

ஜூலியஸ் சீஸர் காக்காய்வலிப்பு நோயினால் அவதிப்பட்டவர். வலிப்பு வரப்போகிறது என்று தெரிந்ததுமே கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு போய்ப் படுத்துக்கொண்டு விடுவாராம். பின்னர் எழுந்து சாதாரணமாக பணியைத் தொடர்வாராம். ஃபிராங்ளின் ரூஸ்வெல்ற் இளம்பிள்ளை வாதத்தால் கால் ஊனமுற்ற நிலையிலும் அமெரிக்க ஜனாதிபதி ஆனவர்.

ஹெலன் கெல்லர் பேச முடியாதவர்; பார்வையற்றவர்; காது கேளாதவர்! யாருடைய அனுதாபத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை அவர். மற்றவர்களுக்கு உதவுவதில் தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்று உறுதிபூண்டார். மனிதர்களுக்கு முன்மாதிரியானார்.

அனுதாபத்தை எதிர்பார்த்து அரற்றிக் கொண்டிருப்பதும், அடுத்தவர் மீது அசூயை கொள்வதும் மனதில் வன்முறை நிறைப்பதும், மற்றவர்களினது – நமது வாழ்வை வீம்புகளால் நரகமாக்கிக் கொள்வதற்கும் அல்ல நாம் பிறந்திருப்பது! வாழ்க்கை ஒரு கொடை! நாம் வாழவே பிறந்தோம்!

- ஆசிரியர்

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அடுத்தவாரம் பணிப் பகிஸ்கரிப்பில்

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் அடுத்த வாரம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக சங்கத்தின் உப செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட வைத்தியர்களின் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுக்காமைக்கு எதிராகவே இந்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியர்களுக்கு தற்போது கொடுக்கப்படும் போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் இதர கொடுப்பனவுகள் 25,000 ரூபாவிலிருந்து 40,000 ரூபா வரை அதிகரிப்பதற்கு 2015ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் முன்னாள் நிதி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ முன்மொழிந்தார். என்றாலும் அதனை இதுவரை அமுல்படுத்தவில்லை.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் வழங்குவதற்கு திறைசேரி நடவடிக்கை எடுத்திருந்ததெனினும் ஏதோவொரு காரணத்தினால் அது கிடைக்கப்பெறவில்லை, அதுமட்டுமன்றி 2015 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்துக்கு அமைய வைத்தியர்களின் போக்குவரத்து மற்றும் இதர கொடுப்பனவுகளை 40000 ரூபாவுக்கு அதிகரித்து தருமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றோம்.

மேலும் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு அத்தியாவசியமானது என்பதுடன் தற்போது நடைமுறையில் உள்ள சம்பள முறைமையை அதன் அடிப்படையிலேயே நடைமுறைப் படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பள முறைமையை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாததன் காரணமாக ஊழியர்கள் வெறுப்படைகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிரமமின்றி தேசிய அடையாளஅட்டைகள் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை

2015 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த), (உ/த) பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு சிரமமின்றி தேசிய அடையாளஅட்டைகள் விநியோகிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆட்பதிவு செய்யும் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு கடந்த வருடங்களில் தேசிய அடையாள அட்டை வழங்குவதில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் பிழைகளை நிவர்த்தி செய்து துரிதமாக அட்டைகளை பெற்றுக்கொடுக்க இம்முறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2015 ஆம் ஆண்டில் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றுவோர் எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் விண்ணப்பப் படிவங்களும் எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கு முதல் தடவை அடையாள அட்டையை விநியோகிப்பது போன்றே விசேட தேர்தல்களின் போது திருத்தத்திற்குரிய மற்றும் காணாமற்போன அடையாள அட்டைக்கான இணைப்பிரதிகளைப் பெற்றுக்கொடுப்பதும் இத்திணைக்களத்தின் முக்கியமான பணியாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு விண்ணப்பப் படிவங்களை நேர காலத்துடன் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்கேற்பவே சிரமமின்றி மாணவர்களுக்கு அடையாள அட்டைகளை விநியோகிக்க முடியும்.

தாமதித்து அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் காரணமாக அடையாள அட்டைகளை குறித்த நேரத்திற்கு அனுப்ப முடியாமை தொடர்பில் சான்றை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் என்ற வகையில் அதிபர்கள் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பசிலுக்கு பதிலாக சுசில் நியமிக்குமாறு கோரிக்கை

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வகித்து வந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவிற்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றப்பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாக இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

பசில் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பதவி விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேல் மாகாணசபை உறுப்பினராக அரசியலில் களமிறங்கிய சுசில் மேல் மாகாணசபையின் முதலமைச்சராகவும் பின்னர் பல்வேறு அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சகல முச்சக்கர வண்டிகளுக்கும் மீற்றர் கருவி பொருத்த வேண்டும்

## நிதியமைச்சர் தெரிவிப்பு

அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் மீற்றர் கருவி பொருத்தப்பட வேண்டும் என நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம் தமது கட்டணத்தை 10 சதவீதத்தால் குறைக்க எடுத்த தீர்மானத்திற்கு அனைத்து முச்சக்கர வண்டி சாரதிகளும் ஒத்துழைக்க வேண்டும். பெற்றோல், டீசல் விலை குறைக்கபபட்டதும் முச் சக்கரவண்டி கட்டணங்களையும் 10 சதவீதத்தால் குறைக்க சங்கங்கள் முன்வந்தமையை நாம் பெரிதும் வரவேற்கின்றோம் எனினும அனைத்து முச்சக்கரவண்டி ஓட்டுனர்களும் இக்கட்டணக் குறைப்பை மேற்கொள்ளவில்லையென நாம் அறிகின்றோம்.

எனவே சங்கங்கள் எடுத்த தீர்மானத்திற்கு ஏனைய சாரதிகளும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தை நுகர்வோருக்கு பயனுடைய தாக்க ஒத்துழைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை இடைக்கால வரவு - செலவுத் திட்டம் 75 முதல் 80 சதவீதமான மக்களுக்கு நன்மையை பெற்றுத் தந்திருப்பதாக எம்மால் அறிய முடிகிறது எனவும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசியல் சார்சேவைக்கு தடை

அமைச்சர் கரு அறிவிப்பு

அரசியல் அடிப்படையில் மக்களுக்கு சேவையாற்ற அனுமதிக்க முடியாது என பொதுநிர்வாக மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். அரசியல் பேதங்களுடன் மக்களுக்கு சேவையாற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கண்காணிக்கப்படுகின்றது. அவ்வாறு அரசியல் பேதம் பாராட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்கப் போவதில்லை.

எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் அரசியல் ரீதியாக பிரிவினை பாராட்டுவதில்லை. கடந்த காலங்களில் எதிர்க்கட்சிகளுக்கு அதிகாரம் இருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

அவ்வாறான அநீதிகளை புதிய அரசாங்கம் இழைக்காது. மக்களின் வரிகளைக் கொண்டு முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மக்களுக்கு நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டுமென கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

# மகிந்தவால் மட்டுமே வெல்ல முடியும் என்று சந்திரிகா சொன்னார்

**கம்யுனிஸ்ட் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டியூ குணசேகர, ஜனாதிபதி தேர்தலின் பின் நாட்டில் எழுந்துள்ள நிலைமை பற்றி சி.ஏ. சந்திரப்பிரேமவுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்களிலிருந்து....**

ஜனாதிபதித் தேர்தல் முடிவையிட்டு நாங்கள் ஆச்சரியப்படவில்லை. 2005 மற்றும் 2010 தேர்தல் முடிவுகள் உட்பட 1977ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற தேர்தல் முடிவுகளைப் பற்றி நாங்கள் ஒரு ஆய்வினை மேற்கொண்டிருந்தோம். எங்கள் மதிப்பீடு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு (யு.பி.எப்.ஏ) வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் வாக்குகள் அதிகரிக்கும் என்பதாக இருந்தது, ஆனால் கணிசமான அளவுக்கு அது இருக்கவில்லை.

மகிந்த வழக்கமாக முஸ்லிம் வாக்குகளில் 20 விகிதத்தை பெற்று வந்துள்ளார். ஆனால் இந்த முறை பொதுபல சேனா காரணமாக கிட்டத்தட்ட அது முற்றாகவே நஷ்டமாகி விட்டது. எங்கள் கட்சியில் இருந்த முஸ்லிம் அங்கத்தவர்கள் கூட மகிந்தவுக்கு வாக்களிக்க மறுத்துவிட்டார்கள்.

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதியை நான் மூன்று முறை சந்தித்தேன். முதல் தடவை சந்தித்த போது வாசு, திஸ்ஸ விதாரண மற்றும் லலித் வீரதுங்க ஆகியோர் உடனிருந்தார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் வரை நாங்கள் பேசினோம்.

பற்றியோ எந்த நினைவும் இல்லை. அவர்கள் ஸ்ரீ.ல.சு.க அமைச்சர்களைத் தவிர வேறு எதையும் பார்த்ததில்லை. எனவே ஒரு மாற்றத்தை நோக்கிச் செல்லும் போக்கு அவர்களிடம் இருக்கக் கூடும்.

மேலும் நான் மகிந்தவிடம் மூன்றாவதும் மற்றும் மிகவும் முக்கியமானதுமான ஒரு காரணத்தை சொன்னேன், அது கடந்த ஒன்பது ஆண்டுகளாக அவர் அரசியல் செய்யவில்லை என்பதாகும். அவர் விழாக்களில் பங்கெடுப்பதும், குழந்தைகளை முத்தமிடுவதும் போன்ற வற்றைத்தான் செய்து கொண்டிருந்தார் ஆனால் அரசியல் செய்யவில்லை. முந்தைய நாட்களில் மக்களுக்கு படிப்பினை ஊட்டுவதற்காக நாங்கள் கிராமங்களுக்குச் செல்வது வழக்கம் மற்றும் மக்களும் அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கி விடுவார்கள். அந்த சக்தி இப்போது முற்றிலும் மறைந்துவிட்டது.

பின்பு எழும் கேள்வி அரசியல்வாதிகள் அனுபவித்துவரும் சலுகைகளைப் பற்றியது. அது அநேகமாக மிகவும் தீமையான ஒரு காரணியாக உள்ளது. எங்கள் ஆய்வுகளின்படி 11 மாவட்டங்களில் மட்டுமே அவர் முன்னணியில் இருப்பதாகவும் மற்றும் இன்னும் இரண்டு வருடங்கள் பாக்கி இருக்கின்றன, இந்தக்காலத்தில்

வழங்க முடிந்தது. எனவே அடிப்படையில் இது ஒரு ஐதேக ஆட்சி. ஒரு ஐதேக நிருவாகத்துக்கு ஆதரவு வழங்கமுடியாது என்கிற நிலைப்பாட்டையே நாங்கள் மேற்கொண்டோம்.

பிறகு அங்கு பல்வேறு மேற்கத்தைய சக்திகள் வேலையில் ஈடுபட்டிருந்தன, அதை எங்களால் சகிக்க முடியாது.

மகிந்தா ஒரு பிரசித்தமான தலைவர். அவர் மதிக்கப்பட்டவர். அவர் மக்களோடு பழகும் ஒரு தலைவர். இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறைதான் அவரைப் பாழடித்தது. 18வது சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்ட போது, நான் அவருடன் பெரிய



செய்கிறார், என்று நான் சொன்னேன். இதுதான் மக்கள் எதிர்பார்த்த சட்டத்தின் ஆட்சியா என நான் ரணிலிடம் கேட்டேன்.

மகிந்த ராஜபக்ஸவுக்கு எதிராக வாக்களித்த கல்வியறிவுள்ள நடுத்தர வகுப்பினர் மற்றும் புத்திஜீவிகள் இப்படியான விடயங்கள் நடப்பதைப் பார்த்தால் உண்மையில் அதிர்ச்சி அடைவார்கள்.

ராஜபக்ஸ அரசாங்கத்தால் ஷிராணி பண்டாரநாயக்காவை பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்குவதற்கு முயன்றபோது நான் வித்தியாசமான நிலைப்பாட்டை எடுத்திருந்தேன்.

ஜனாதிபதி நீதியரசர்களை நியமிக்கிறார், ஆனால் அவர்களை அகற்றுவது பாராளுமன்றத்தால் மட்டுமே செய்யமுடியும். அவர்கள் இந்த விடயத்தை பாராளுமன்றத்தின் முன்பாக கொண்டுவந்து, மொஹான் பீரிஸின் நியமனம் தவறானது 'என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்க வேண்டும், அப்படிச் செய்திருந்தால் பதவியிலிருந்த நீதியரசர் சிறிதளவு சுயமரியாதையுடன் வீட்டுக்குச் சென்றிருப்பார். நிறுவனத்தின் மதிப்பையும் சற்று கவனத்தில் எடுத்திருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலையில் பதவிக்கு வரும் அடுத்த நீதியரசருக்கும் ஒரு வித தர்மசங்கடமான நிலை ஏற்பட்டிருக்கும்.

2001க்கு திரும்ப வருவோமானால், ஐதேக அதிகாரத்தை வெற்றி கொண்ட போது, அவர்கள் மற்றவர்கள் பின் பற்றக் கூடிய விதத்தில் நடந்து கொண்டார்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சந்திரிகா குமாரதுங்க பின்னால் சென்று விசாரிக்கவோ அல்லது தங்கள் அரசியல் போட்டியாளர்களை தொந்தரவு செய்யவோ இல்லை.

2004ல் பாராளுமன்றத்தில் சந்திரிகா தனது பெரும்பான்மையை பெற்றுக் கொண்ட பின்னும் அவரும் தான் முன்பிருந்ததைவிட மிக அதிகம் ஆர்ப்பாட்டமில்லாமல் நடந்து கொண்டார்.

பின்னர் அதிகாரம் மகிந்த ராஜபக்ஸவின் கரங்களுக்கு சென்றபோது அவரும் கூட பாரம்பரியத்தை கடைப்பிடித்தார் மற்றும் ராஜபக்ஸ அரசாங்கத்தின் கீழ் ஐதேக, ஜேவிபி, அல்லது ரிஎன்ஏ அங்கத்தவர்கள்கூட துன்புறுத்தல்களுக்கு ஆளாகவில்லை. ஷிராணி பண்டாரநாயக்காவை அகற்றியதில்கூட சரியான நடைமுறை பின்பற்றப்பட்டது.

எனது கருத்துப்படி, தற்போதைய பிரதம நீதியரசரை பதவி விலக்குவதும் மற்றும் ஷிராணி பண்டாரநாயக்காவை மீண்டும் பதவியில் அமர்த்துவதும் ஆகிய இரண்டு விடயங்களும் பாராளுமன்றத்தின் முன் வந்திருக்க வேண்டும். ரணிலைப் பற்றி தெரிந்த அளவில் இப்படியான ஒரு விடயம் அவரிடம் இருந்து வந்திருக்காது என்றே எங்களில் பலரும் நினைத்தார்கள். அவரை இப்படிச் செய்ய வேண்டும் என்று எது தூண்டியிருக்கும் என்று என்னால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை. இது பயங்கரவாதத்தை தவிர வேறு எதுவுமில்லை.

இதில் சம்பந்தப்பட்டிருக்கும் நிறுவனம் நீதித்துறை. சட்டத்தின் மதிப்பு இங்கு குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. இப்போது நீதிபதிகள் விரும்பத் தகாத தீர்ப்புகளை தங்களுக்கு வழங்கினார்கள் என்று, மக்கள் அவர்களை வேறு இடங்களில் வைத்து தாக்கவும் தொடங்கலாம். ஜே.ஆர் வழக்கமாகச் சொல்வது நிறைவேற்று அதிகாரத்தினால் ஆணைப் பெண்ணாக்கவும் மற்றும் பெண்ணை ஆணாக்கவும் மட்டுமே முடியாது மற்ற அனைத்தையும் செய்யலாம் என்று, இந்த விடயம் அந்தக் கருத்தை உறுதி செய்வதற்காக எங்களுக்கு கிடைத்துள்ள ஒரு உதாரணம்.

**எனது கருத்துப்படி, தற்போதைய பிரதம நீதியரசரை பதவி விலக்குவதும் மற்றும் ஷிராணி பண்டாரநாயக்காவை மீண்டும் பதவியில் அமர்த்துவதும் ஆகிய இரண்டு விடயங்களும் பாராளுமன்றத்தின் முன் வந்திருக்க வேண்டும். ரணிலைப் பற்றி தெரிந்த அளவில் இப்படியான ஒரு விடயம் அவரிடம் இருந்து வந்திருக்காது என்றே எங்களில் பலரும் நினைத்தார்கள். அவரை இப்படிச் செய்ய வேண்டும் என்று எது தூண்டியிருக்கும் என்று என்னால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை. இது பயங்கரவாதத்தை தவிர வேறு எதுவுமில்லை.**

**டியூ குணசேகர**

தற்போதைய ஆட்சி பற்றிய காரணிகளை நான் ஜனாதிபதியிடம் சொன்னேன். அவர் 9 வருடங்களாக ஜனாதிபதியாக இருந்து வருகிறார், மற்றும் அதற்கு முன்பு அவர் ஒரு 'அமைச்சராக கிட்டத்தட்ட மற்றொரு தசாப்தத்துக்கு மேல் இருந்துள்ளார். எங்கள் நாட்டில் அத்தகைய நீண்ட காலம் யாரும் பதவிகளில் இருந்ததில்லை.

மேலும் 1994க்குப் பிறகு பிறந்த இளைஞர்கள் இப்போது முதல் முறையாக வாக்களிக்கத் தயாராக உள்ளார்கள் அது மட்டுமே கிட்டத்தட்ட 600,000 வாக்குகள் வரை வரும். இந்த வாக்காளர்கள் ஒரு ஐதேக அரசாங்கத்தை ஒரு போதும் பார்த்ததில்லை மற்றும் அவர்கள் யாருக்கும் கறுப்பு ஜூலை (1983) பற்றியோ அல்லது ஜூலை வேலைநிறுத்தம்(1980)

தீர்க்கப்படாத பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இன்னமும் இரண்டு வரவு செலவுத் திட்டங்கள் உள்ளன, மற்றும் இன்னும் இரண்டு வருடங்களுக்குப் பிறகு நாங்கள் தோல்வி அடைந்தாலும் கூட அது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தாது என்று நான் அவருக்கு எடுத்துக் கூறினேன். ஆனால் இது தான் சிறந்த தருணம் என அவர் வலியுறுத்தினார்.

மகிந்த ராஜபக்ஸவுடைய குற்றங்குறைகளுக்கு அப்பால், அவருக்கு நாங்கள் பின்துணை வழங்கினோம். அது வெறுமனே ஒரு ஆளுமை பற்றிய விடயமல்ல. எங்கள் கட்சி பொதுவாக ஒட்டுமொத்த நிலமை மற்றும் கொள்கைகளைத்தான் பார்க்கிறது.

மைத்திரிபால சிறிசேன வெளியே வந்ததும் அவருக்கு ஐதேக வாக்குகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவருடன் ஒருமித்த அனைவராலும் 10 விகித வாக்குகளையே

விவாதத்தில் ஈடுபட்டேன் மற்றும் அவரிடம் நான் சொன்னேன் நீங்கள் விரும்பும் காலம்வரை பிரதமராக பதவி வகியுங்கள் என்று.

2005ல் ஒருநாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்னை அழைத்திருந்தார், சுமார் ஒரு மணி நேரம்வரை நாங்கள் கலந்துரையாடினோம். அப்போது தனக்கு பின்னால் ஜனாதிபதியாக வரக்கூடிய ஒருவர் தன்னிடம் இல்லை என அவர் சொன்னார். சாத்தியமான பல நபர்களின் பெயரை அவர் குறிப்பிட்டார், ஆனால் நான் விரும்புகிறேனோ அல்லது இல்லையோ தேர்தலில் வெற்றிபெறும் சாத்தியமுள்ள ஒரேமனிதர் மகிந்ததான் என்று அவர் சொன்னார். மங்கள மற்றும் எஸ். பி ஆகியோரே தன்னை மகிந்தாவிடம் இருந்து தூரப்படுத்தியது என்றும் அவர் சொன்னார்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் நான் ஆற்றிய எனது முதல் பாராளுமன்ற உரையில் ஐதேக அரசாங்கத்தினரின் சட்டவிரோத தேடுதல்களைப் பற்றிய கேள்வியை நான் எழுப்பியிருந்தேன். புதிய நிதி அமைச்சரான ரவி கருணாநாயக்கா தொலைக்காட்சியினரின் புகைப்படக் கருவி மற்றும் காவல்துறையினர் சகிதம் ஒரு வீட்டைச் சோதனையிடச் சென்று காவல்துறையினர் பார்த்துக் கொண்டு நிற்கையில் இவர் கேள்வி கேட்கும் வேலையை செய்கிறார். பிறகு, பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க என்பவர் ஒரு சீருந்தினை தேடி சில வீடுகளுக்குச் செல்கையில் மீண்டும் காவல்துறையினர் பார்த்துக் கொண்டு நிற்கையில் அவர் விசாரணை

# சீனாவுடனான உறவுகள் குறித்து இந்தியாவிடம் தவறான கருத்து

## பழிவாங்கலுக்கு அஞ்சமாட்டேன் என்கிறார் கோத்தா

(புதுடில்லி)

**சீனாவுடனான உறவுகள் குறித்து இந்தியா தவறான கருத்தைக் கொண்டுள்ளதாகவும் உள்நாட்டிலோ மேற்கு நாடுகளினதோ பழிவாங்கல்களுக்கு தாம் அஞ்சப்போவதில்லையெனவும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய தெரிவித்துள்ளார்.**

இந்திய இணையத்தளம் ஒன்றுக்காக, நிதின் ஏ கோகலேவுக்கு மின்னஞ்சல் மூலம் அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எந்த தரப்பில் இருந்தும் வரும் பழிவாங்கல்களுக்கோ, மேற்குலகின் பழிதீர்க்கும் நடவடிக்கைகளுக்கோ நான் அஞ்சவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நாடுகளை எதிர்த்து அவர்களின் மீது நடவடிக்கையை மேற்கொண்டபோதே அதன் ஆபத்தை உணர்ந்திருந்தோம்.

நாம் தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டு வர போராடினோம். அது எமது நாட்டுக்கு நாம் செய்த கடமை. அதற்காக நாம் அபாயங்களை எதிர்கொண்டு செய்த தியாகத்தை மக்கள் இன்னமும் மதிக்கிறார்கள்.

ஆட்சியில் இருத்துவதற்கும், அகற்றுவதற்குமான வாக்களிப்பு என்பது வித்தியாசமானது.

இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்ற பின்னர், வின்ஸ்டன் சேர்ச்சில் கூட தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார். அதற்காக போரை நடாத்திய தலைமையை பிரித்தானிய மக்கள் நிராகரித்து விட்டனர் என்று அர்த்தமில்லை.

1980களில் போர் தொடங்கியதில் இருந்து இலங்கையின் எல்லா அரசாங்கங்களுமே,பெரும்பாலான ஆயுத தளபாடங்களை சீனாவிடம் இருந்தே வாங்கின. எமது அரசாங்கத்திலும் அது தொடர்ந்தது.

2006 ஆம் ஆண்டு எமது அரசாங்கம் இறுதிக்கட்டப் போரை ஆரம்பித்த போது, தமிழ்நாட்டின் அழுத்தங்களால், இந்தியா எமக்கு ஆயுதங்களை விற்க முடியவில்லை.

இந்தியாவிடம் இருந்து ஆயுதங்களை வாங்கிக் கொள்வது சாத்தியமாகியிருந்தால், நிச்சயமாக அதனைச் செய்திருப்போம். அந்தக் காலகட்டத்தில் இந்திய பாதுகாப்புச் செயலராக இருந்த விஜய்சிங்கிடம் புதுடில்லியில் இது குறித்து விளக்கியிருந்தேன். அவர் கூட அதனை ஒப்புக்கொண்டிருந்தார்.

போர் தொடங்கியதில் இருந்து முடியும் வரை இந்தியாவுடன் மிக நல்ல உறவு இருந்தது. எவ்வாறாயினும், கடந்த சில ஆண்டுகளாக, சீனாவுடனான உறவுகள் குறித்து இந்தியா தவறான கருத்தைக் கொண்டிருந்திருக்கலாம்.

நாம் சீனாவுடன் எப்போதும் மிகச் சிறந்த உறவைக் கொண்டிருக்கிறோம். சீனாவிடம் இருந்து பெறப்பட்ட கடன்களின் மூலம் ஒருதொகையான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனை சீனாவின் வட்டத்துக்குள் இலங்கை மூழ்கி விட்டதாக, இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தவறாக கருதுகின்றனர் என்று நினைக்கிறேன்.



போரின் போது, இலங்கை எதிர் கொள்ளும் பிரச்சினைகளை இந்தியா புரிந்து கொள்வது முக்கியமானதாக இருந்தது.

பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில், நாம், இருதரப்பிலும், மூவர் அணியை உருவாக்கியிருந்தோம்.

இந்திய தரப்பில், பாதுகாப்புச் செயலர், வெளிவிவகாரச் செயலர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும், இலங்கை தரப்பில் நானும், ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்கவும், ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவும் அந்த அணியில் இடம் பெற்றிருந்தோம்.

இந்த மூவர் அணியில் இருந்தவர்கள், ஒருவர் இன்னொருவருடன் எந்த நேரத்திலும், அது பகலோ, இரவோ நேரடியாகத் தொலைபேசி மூலம் உரையாட முடிந்தது. இலங்கையில் என்ன நடக்கிறது என்ற எல்லா விபரங்களையும், பசில் ராஜபக்ஷ இந்திய தரப்புக்கு அளித்துக் கொண்டிருந்தார்.

இந்தியாவுக்கும் கூட அச்சுறுத்தலான விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் குறித்து இந்தியா நன்றாகவே அறிந்திருந்தது. அந்த புரிதல் எமக்கு உதவியது.

இந்தியாவின் நட்பும் ஆதரவும் இலங்கைக்கு மிகவும் முக்கியம்.

இந்தியாவும் சீனாவும் பல பத்தாண்டுகளாக பதற்றத்தைக் கொண்டிருக்கின்றன. ஆனால், இலங்கை இந்த இரண்டு நாடுகளுடனும், பாரம்பரியமாக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கிறது.

சீனாவுடனான இலங்கையின் உறவு எப்போதுமே, பொருளாதார நோக்கம் கொண்டது. கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கி எரிபொருள் நிரப்புவதற்காகவே தரித்துச் சென்றது, அதில் எந்த இராணுவ நோக்கமும் கிடையாது.

நாம் அதிகாரத்தில் இருந்தவரையிலும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும், அனுதாபிகளும், மீண்டும் தலையெடுப்பதற்கான சாத்தியங்கள் குறித்து விழிப்புடன் இருநதோம். அந்த விழிப்பு நிலை தொடர்ந்தது.


தமிழ் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக, இந்தியா பாதுகாப்பு அளிக்க வேண்டும். தமிழ்ப் பிரிவினைவாதக் கொள்கை தமிழ்நாட்டின் வழியாகவே. வந்தது.

இந்தியாவில் தமிழ்ப் பிரிவினைவாதம் நண்டகாலமாக இருந்து வருகிறது. அதுவே இலங்கைக்கும் பரவியது.

1980களில் தமிழ் தீவிரவாத குழுக்களை ஊக்குவித்து இந்தியா பாரிய தவறை இளைத்துள்ளது.தவறான மனிதர்களுக்கு மீண்டும் தவறான சமிக்ஞைகளை அனுப்பாமல் இந்தியா கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலஞ்ச ஊழல் முறைப்பாடுகளுக்கு

# நடவடிக்கை இல்லையெனில் வீதியில் இறங்கும் ஜே.வி.பி



(கொழும்பு)

இலஞ்ச, ஊழல் மோசடியுடன் தொடர்புடையவர்கள் குறித்து முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் சிலவற்றுக்காவது இன்னும் இரண்டு வாரங்களில் நடவடிக்கை எடுக்கப்படாவிடின், வீதியில் இறங்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொடுக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு ஒருவர் அல்லது இருவரையாவது கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

அவ்வாறு நடைபெறாது போனால், அதற்குத் தடையாக ஜனாதிபதியோ, பிரதமரோ இருந்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஊழல் மோசடிகளை விசாரிக்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழு

கடந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவொன்று அடுத்தவாரம் நிறுவப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரலகங்விலவில் இடம் பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதவி, தராதரம், கட்சி மற்றும் நபர்கள் யாரென்று பார்க்காது இந்த ஆணைக்குழு செயற்படும்.

சொத்துக்களை முடக்கிய, களவெடுத்த, ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட சகலரும் ஆணைக் குழுவின் முன்பாக கொண்டுவரப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.



புதிய அரசாங்கம் பதவியேற்று ஒரு மாதம் கடந்து விட்டது. இந்நிலையில் ஊழல், மோசடி, கொள்ளை மற்றும் நிர்வாக சீர்கேட்டில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏன் செயற்படவில்லை என்பது தனக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் மக்கள் அந்தத் திசையை நோக்கி பார்த்துகொண்டிருக்கின்றனர் எனவும் தற்போதே காலம் கடந்துவிட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

## தடுமாறும் ஹெலஉறுமய

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் தனித்துக் களமிறங்குவதா? அல்லது பிரதான கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதா என்ற முடிவுக்கு வர முடியாமல் ஜாதிக ஹெல உறுமய தடுமாறிக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தம்முடன் இணைந்து போட்டியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியும், சறிலங்கா சுதந்திரக் கட்சியும் தனித தனியாக தமக்கு அழைப்புக்களை விடுத்திருப்பதாக ஹெல உறுமயவின் ஊடக செயலாளரும், மாகாணசபை உறுப்பினருமான நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்

## பாதுகாப்பு அமைச்சின்

# மேலதிக செயலாளர் மீது ஊழல் மோசடி முறைப்பாடு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் டி.எம். ஜயரட்னவுக்கு எதிராக கடற் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த ஆயுதக் கப்பலின் உரிமையாளர், ஊழல், மோசடி வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

என். எஸ்.டி. என். கடல் பாதுகாப்பு நிறுவனத்தின் உரிமையாளரான மேஜர் நிஷாந்த ராஜபக்ஷ சோமாலிய கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தலிலிருந்து இலங்கை கடல் எல்லையைப் பாதுகாப்பதற்கான சேவையை தமது நிறுவனத்திற்கே முதன் முதலாக பெற்றுத்தருவதாக கூறினார்.

இந்த நிறுவனம் பெருமளவிலான ஆயுதங்களுடன் பயிற்சியும் அனுபவமும் நிறைந்த விசேட பாதுகாப்பு அதிகாரிகள். கடற்படை அதிகாரி கள் மற்றும் கொமாண்டோக்களையும் கடற்பாதுகாப்புக்காக வழங்க முன்வந்துள்ளது.

இந்நிலையில், கடற்பாதுகாப்பிற்காக வேறு ஒரு பாதுகாப்பு நிறுவனத்தின் சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்கில் மேலதிக செயலாளர் டி. எம். ஜயரட்ன தனது நிறுவனம் மீது பாரபட்சமாக நடந்துகொள்வதாக முறைப்பாடு செய்துள்ளார்.

நிஷாந்த ராஜபக்ஷ இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற அதிகாரியாவார். இவர் சில அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

# சுவிஸ் வங்கிகளில் இலங்கையரின் பணம்

(கொழும்பு)

சுவிற்சர்லாந்து வங்கிகளில் இலங்கையைச் சேர்ந்தவர்களால் 58.3 மில்லியன் டொலர் பணம் இரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவிஸ் லீக்ஸ் வெளியிட்டுள்ள தகவலின்படி, இலங்கையைச் சேர்ந்த 92 வாடிக்கையாளர்களால், சுவிஸ் வங்கிகளில் 129 கணக்குகள் பேணப்பட்டு வருவதாக தெரிவிக் கப்படுகிறது.

அதிகபட்சமாக இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவரால், 10.7 மில்லியன் டொலர் வைப் பில் இடப்பட்டுள்ளது.

சுவிஸ் வங்கிகளில் பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில், இலங்கை 112 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

# நகரப்பாடசாலைக்கு எந்தவிதத்திலும் கிராம பாடசாலைகள் குறைந்தவையல்ல

## வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கிராமப்புறப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளில் சிறந்த சித்திகளைப் பெறுவதன் மூலம் எத்த விதத்திலும் நகரப்பாடசாலைகளுக்கு குறைந்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தமுடியும் என புளொட் தலைவரும், வடமாகாண சபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மீசாலை வீரசிங்கம் மத்திய மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி பயின்ற ஆர்.தனுஜன் என்ற மாணவன் அகில இலங்கை ரீதியில் (3A) சித்திபெற்று நேரடியாக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இம்மாணவனை புளொட் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாணசபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராட்டி வாழ்த்தியதோடு நேற்றுமுன்தினம் வித்தியாலயத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் வைத்து அவருக்கு ஊக்குவிப்பு அன்பளிப்பையும் வழங்கியுள்ளார்.

வித்தியாலயத்தின் அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இந்த மாணவரை நாம் ஊக்குவிப்பது இங்கு கல்விபயிலும் மாணவர்கள் அனைவரும் இவரை முன்மாதிரியாகப் பின்பற்றி, தங்கள் கல்விச் செயற்பாடுகளில் சிறந்து விளங்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இப்போது கிராமப் புறங்களைச் சேர்ந்த பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நகரப் புறங்களில் உள்ள பெயர் பெற்ற பாடசாலைகளுக்கே கல்வி கற்பதற்காக அனுப்ப வேண்டுமென்றும், அங்குதான் கல்வி சிறந்து விளங்குமென்ற நம்பிக்கையில் பிள்ளைகளை அனுப்ப முயற்சிகளை எடுத்து அப்பாடசாலைகளில் சேர்க்கின்றார்கள்.

ஆனால் கிராமப்புற பாடசாலையைச் சேர்ந்த இந்த மாணவன் இப்படியான ஒரு மிகச் சிறந்த சித்தியினைப் பெற்றதன்மூலம் கிராமப் பாடசாலைகள் எந்த விதத்திலும் நகரப் பாடசாலைகளுக்கு குறைந்தவையல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ளும் படி நிரூபித்துள்ளார்.

எனவே கிராமத்து மாணவர்கள் கிராமப் பாடசாலைகளுக்குச் செல்வதன் மூலம் கிராமமும் பாடசாலைகளும் முன்னேறுவதுடன் அந்தப் பிள்ளைகளுக்கும் அது வசதியாக இருக்கும்.

மேலும் கிராமப் பாடசாலைகளை முன்னேற்றுகின்ற பணிகளில் அதிபர்களும் ஆசிரியர்களும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்கள. ஆகவே மாணவர்களும் மிக அக்கறையுடன் கல்வி கற்பதன்மூலம் கிராமங்களையும் கிராமப் பாடசாலைகளையும் முன்னேற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (63)

# தரிசு நிலங்களை துப்புரவுசெய்து விவசாயிகளிடம் கையளிக்க ஏற்பாடு

## மாவட்ட கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலம் பயிர்ச் செய்கைகளுக்கு உட்படுத்தப்படாது தரிசு நிலங்களாக காணப்படும் பயிர்ச் செய்கை நிலங்களைத் துப்புரவு செய்து விவசாயிகளிடம் கையளிப்பதற்கான திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால், 'தரிசு நிலங்களை இல்லாது ஒழிக்கும் 2015 ஆம் ஆண்டு' எனும் தொனிப்பொருளிலான இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட காலம் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாது தரிசு நிலங்களாக காணப்பட்ட வயல் நிலங்கள் துப்புரவு செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டு பயிர்ச் செய்கைகளும மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டைப் போல இந் ஆண்டும் எஞ்சியுள்ள தரிசு நிலங்களைத் துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் படவுள்ளன என்றார். முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள 10 கமநல சேவை நிலையங்களின் கீழ் 148 கமக்கார அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத கருக்கலைப்பு கோண்டாவிலில் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக தனக்குத் தானே கருக்கலைப்புச் செய்து, இறந்து பிறந்த சிசுவை வீட்டு வளவுக்குள் புதைத்த பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோண்டாவில் பகுதியில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 26 வயதான குறித்த பெண் மூன்று வருடங்களுக்கு முன்னரே தனது கணவரைப் பிரிந்து வாழ்கிறார். இந்நிலையிலேயே அவர் கர்ப்பமடைந்துள்ளார். ஆனால் கர்ப்பம் எனத் தெரியாத இப் பெண் வயிறு வீக்கத்துக்காக மருத்துவப் பரிசோதனைக்கு சென்றுள்ளார். இதன்போதே அவர் கர்ப்பவதி என்பது உறுதியானது. இதனாலேயே அவர் தனக்குத் தானே கருக்கலைப்புச் செய்து பிறந்த சிசுவை வீட்டு வளவுக்குள் புதைத்துள்ளார்.

இது குறித்து அப்பகுதி சுகாதாரப் பிரிவினருக்குத் தெரியவரவே அவர்கள் பொலிஸாருக்கு தகவல் அளித்தனர். இதன் அடிப்படையில் குறித்த பெண் கோப்பாய் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.



# மைதானங்கள்; ஒரு சிறு பார்வை

11ஆவது உலக கோப்பை கிரிக்கெட் திருவிழா மொத்தம் 14 மைதானங்களில் அரங்கேறுகிறது. இதில் அவுஸ்ரேலியாவில் 26 ஆட்டங்களும், நியூசிலாந்தில் 23 ஆட்டங்களும் நடாத்தப்படுகின்றன. இங்குள்ள பெரும்பாலான மைதானங்கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது. அதேநேரத்தில் நியூசிலாந்தின் மைதானங்கள் சிறியவை என்பதால் தாராள ஓட்ட வேட்டையும் நடாத்த முடியும்.

அது பற்றிய ஒரு கண்ணோட்டம் வருமாறு:-

**மெல்பேர்ன்** (இந்த உலக கோப்பையில் இறுதிப்போட்டி உட்பட 5 ஆட்டம்): உலக கிரிக்கெட் அரங்கில் மிகப்பெரிய மைதானம் இது தான். நீண்ட பாரம்பரியமிக்க இந்த மைதானம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் அமரும் வசதி கொண்டது. சர்வதேச முதலாவது டெஸ்ட், சர்வதேச முதலாவது ஒரு நாள் போட்டி நடந்த மைதானம் என்ற பெருமைக்குரியது. 1992ஆம் ஆண்டு உலக கோப்பையை அவுஸ்ரேலியா-நியூசிலாந்து இணைந்து நடாத்தியபோது அதன் இறுதி ஆட்டம் இங்கு தான் அரங்கேறியது. இந்த முறையும் இறுதிப்போட்டியை நடாத்தும் வாய்ப்பை பெற்றிருக்கிறது. இங்கு இதுவரை 139 ஒரு நாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன. ஐ.சி.சி. லெவன் அணி 2005ஆம் ஆண்டு ஆசிய லெவனுக்கு எதிராக 8 விக்கெட்டுக்கு 344 ஓட்டங்கள் குவித்தது இந்த மைதானத்தின் அதிகபட்சமாகும். 1979ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இங்கிலாந்து 94 ஓட்டங்களுள் சுருண்டது மோசமான ஸ்கோராகும். இந்தியா-தென்னாபிரிக்க அணிகள் இடையிலான லீக் ஆட்டமும் இங்கு நடைபெறவுள்ளது.

**சிட்னி** (அரையிறுதி, காலிறுதி உள்பட 5 ஆட்டம்): கிரிக்கெட் வீரர்கள் இரசித்து விளையாடும் புகழ்பெற்ற மைதானங்களில் சிட்னியும் ஒன்று. இதுவரை 146 ஒரு நாள் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன. 44 ஆயிரம் இரசிகர்கள் அமர்ந்து கண்டு கழிக்கலாம். அவுஸ்ரேலிய அணி இங்கு 124 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 81இல் வெற்றி பெற்றுள் ளது. 10 முறை 300 ஓட்டங்களுக்கு மேல் குவிக்கப்பட்டுள்ள இந்த மைதானத்தில் 2006ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக அவுஸ்ரேலியா 5 விக்கெட்டுக்கு 368 ஓட்டங்கள் திரட்டியதே அதிகபட்சமாகும்.

**பேர்த்** (3 ஆட்டம்): உலகின் அதிவேக ஆடுகளம் என்ற சிறப்புக்குரியது. பந்து பயங்கரமாக எகிறும் (பவுன்ஸ்) தன்மை கொண்டது. நடப்பு உலக கோப்பையில் இந்திய அணி இங்கு 2 லீக்கில் (ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மே.தீவுகள் எதிராக) விளையாட இருக்கிறது. 22 ஆயிரம் இருக்கைகள் கொண்டது. இருக்கை வசதியை 24,500 வரை தற்காலிகமாக உயர்த்திக் கொள்ளலாம். இதுவரை நடைபெற்ற 75 ஒரு நாள் போட்டிகளில் 21 சதங்கள் பதிவாகி இருக்கின்றன. ஆனால் ஒரு இந்தியரும் இங்கு சதம் கண்டதில்லை. 2007ஆம் ஆண்டில் நியூசிலாந்துக்கு எதிராக அவுஸ்ரேலியா 5 விக்கெட்டுக்கு 343 ஓட்டங்கள் எடுத்தது இந்த மைதானத்தின் சிறந்த ஓட்ட எணணிக்கையாகும்.

**அடிலெய்ட்** (காலிறுதி உள்பட 4 ஆட்டம்): இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையிலான லீக் ஆட்டம் நடைபெற இருப்பதால், அடிலெய்ட் மைதானம் இப்போது இரசிகர்கள் மத்தியில் தனிக்கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த நாள் வரை 77 ஒரு நாள் போட்டிகள் நடந்திருக்கின்றன. இங்கு பதிவாகி இருக்கும் தனிநபர் அதிகபட்ச ஓட்டங்களில் முதல் 7 இடங்களில் வெளிநாட்டவர்களே இருக்கிறார்கள். இதில் மே.தீவுகளின் பிரையன் லாரா (156), இந்தியாவின் கங்குலி (141), வி.வி.எஸ்.லக்ஸ்மன் (131) ஆகியோரும் அடங்குவர். இங்கு 50 ஆயிரம் பேரை அனுமதிக்க முடியும். இந்த மைதானத்தில் இந்திய அணி 13 ஆட்டங்களில் விளையாடி 7இல் வெற்றியும், 5இல் தோல்வியும் கண்டுள்ளது. மற்றொரு ஆட்டம் சமநிலையானது.

**பிரிஸ்பேன்** (3 ஆட்டம்): கப்பா என்று அழைக்கப்படும் பிரிஸ்பேனில் ஏறக்குறைய 40 ஆயிரம் பேர் நேரில் ஆட்டத்தை இரசிக்கலாம். 73 ஒரு நாள் போட்டிகள் நடந்துள்ளன.

**கான்பெர்ரா** (3 ஆட்டம்): அவுஸ்ரேலியாவின் தலைநகரான இங்கு இதுவரை 4 ஒரு நாள் போட்டிகள் மட்டுமே நடந்திருக்கின்றன.

**ஹோபர்ட்** (3 ஆட்டம்): இதுவரை 32 ஒரு நாள் போட்டிகள் நடந்துள்ளன. இங்கு தான் 2012ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக அந்த அணி நிர்ணயித்த 321 ஓட்டங்கள் இலக்கை இந்திய அணி ஹோலியின் அதிரடி சதத்தின் துணையுடன் 36.4 ஓவர்களில் எட்டிப்பிடித்து வரலாறு படைத்தது நினைவு கூரத்தக்கது.

**ஒக்லாண்ட்** (அரையிறுதி உள்பட 4 ஆட்டம்): நியூசிலாந்து மண்ணில் அதிக ஒரு நாள் போட்டிகள் (68) நடைபெற்ற மைதானம் இது தான். 50 ஆயிரம் இருக்கை வசதிகளை உள்ளடக்கியது. நியூசிலாந்து அணி 2007ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 5 விக்கெட்டுக்கு 340 ஓட்டங்கள் சேர்த்தது அதிகபட்சமாகும். இதே நியூசிலாந்து 2007ஆம் ஆண்டில் இலங்கைக்கு எதிராக 73 ஓட்டங்களில் முடங்கியது குறைந்த பட்சமாகும்.

**வெலிங்டன்** (காலிறுதி உட்பட 4 ஆட்டம்): இதுவரை 23 ஒரு நாள் போட்டிகளை சந்தித்துள்ள வெலிங்டன் வெஸ்ட் பாக் மைதானம் 33,500 இருக்கை வசதிகளைக் கொண்டது.

**கிறைஸ்ட்சர்ச** (3 ஆட்டம்): உலக கோப்பையையொட்டி புதிதாக கட்டப்பட்ட கிறைஸ்ட்சர்ச் ஹாக்லே ஓவல் மைதானத்தில் இந்த உலக கோப்பையின் ஆரம்ப ஆட்டம் (நியூசிலாந்து-இலங்கை) நடைபெறவிருக்கிறது. இந்த மைதானம் உலக கோப்பைக்காக பயன்படுத்தப்படும் 100ஆவது மைதானம் என்ற சிறப்பையும் பெறுகிறது.

**நேப்பியர்** (3 ஆட்டம்): இதுவரை 39 ஒரு நாள் போட்டிகள் இந்த மைதானத்தில் நடாத்தப்பட்டுள்ளது. நியூசிலாந்து கப்டன் பிரண்டன் மக்கல்லம் இங்கு 20 சிக்சர்கள் அடித்திருக்கிறார்.

**ஹமில்டன்** (3 ஆட்டம்): 24 ஒரு நாள் போட்டிகள் நடந்துள்ளன. உலக கோப்பையில் இந்திய அணி இங்கு அயர்லாந்துடன் மோதவிருக்கிறது. அவுஸ்ரேலியாவின் மத்யூ ஹைடன் 2007ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக 181 ஓட்டங்கள் விளாசியது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**டுனெடின்** (3 ஆட்டம்): 6 ஆயிரம் இரசிகர்கள் மட்டுமே நேரில் ஆட்டத்தை பார்க்க முடியும். அதிரடி துடுப்பாட்ட வீரர்களுக்கு உகந்த மைதானம்.

**நெல்சன்** (3 ஆட்டம்): இதுவரை 2 ஒரு நாள் போட்டி மட்டுமே நடந்துள்ளது.

ICC CRICKET WORLD CUP 2015

## பயிற்சி ஆட்டங்கள்

**பங்களாதேஷ்/பாகிஸ்தான்**

பங்களாதேஷ் 246/10 (50)
தமிம் இக்பால் - 8J
மக்முதுல்லா - 83
விக்கெட் : எம். இர்பான் 5

பாகிஸ்தான் 247/7 (47.1)
சொகைப் மகூத் 93

3 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் வெற்றி.

## முடிந்தது டும் டும்



பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ஜுனைத் கான் நேற்று முன்தினம் இல்லற வாழ்க்கையில் இணைந்துள்ளார்.

இவர் நடைபெறவுள்ள உலகக் கிண்ண பாகிஸ்தான் அணியில் இடம் பெற்றிருந்தார். ஆனால் சில தினங்களுக்கு முன் காயம் காரணமாக பாகிஸ்தான் அணியில் இருந்து விலகி தாயகம் திரும்பினார்.

இந்நிலையில் இங்கிலாந்தில் வசிக்கும் மட்யுல்லா கான் என்பவரின் மகள் கனாசா கானை நேற்று முன்தினம் மணந்தார். இவர்களுக்கு 6 மாதங்களுக்கு முன்பே திருமண நிச்சயம் செய்யப்பட்டிருந்தது.

இவர்களது இந்த திருமணம் பெஷாவரில் உள்ள ஜுனைத் கானின் சொந்த கிராமத்தில் நடைபெற்றது. உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



## கிண்ணம் வெல்ல தென்னாபிரிக்காவுக்கு வாய்ப்பு



நடப்பு உலக கிண்ணத்தை வெல்ல தென்னாபிரிக்காவுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

2011 உலக கோப்பை போட்டிக்கு முன்பு அனுபவம், இளம் வீரர்கள் ஆகியவற்றால் இந்திய அணி உலக கோப்பையை வெல்லும் என்று கருதப்பட்டது. அது மாதிரியான நிலைதான் தற்போது தென்னாபிரிக்காவுக்கு உள்ளது.

டிவில்லியர்ஸ் தலைமையிலான தென்னாபிரிக்க அணி அனைத்து நிலையிலும் சிறந்து விளங்குகிறது.

துடுப்பாட்ட வரிசை பலம் பெற்றுக் காணப்படுகிறது. சகலதுறை வீரர்கள் அதிகமான பேர் உள்ளனர். ஆட்டத்தை நிறைவு செய்வதில் வல்லவர்கள். உலகின் சிறந்த பந்து வீச்சாளர்களை கொண்டது. இதனால் உலக கோப்பையை வெல்ல தென்னாபிரிக்காவுக்கு வாய்ப்பு இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகின் சிறந்த அணிகளில் ஒன்றான தென்னாபிரிக்கா இதுவரை உலக கோப்பையை வென்றதில்லை. 1992, 1999இல் அரையிறுதியில் அதிர்ஷ்டம் இல்லாமல் வெளியேறியது என்பது குறிப்பிடத்தக்கது.

## பதில் வீரராக துஷ்மன்த

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் தம்மிக்க பிரசாத்தின் கையில் காயம் ஏற்பட்டதை அடுத்து உலகக் கிண்ண போட்டிக்கான அணியில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை பயிற்சியின்போது காயத்திற்கு உள்ளான பிரசாத், நான்கு வாரங்களுக்கு ஓய்வு எடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

இதனால் அவருக்கான மாற்று வீரராக வேகப்பந்து வீச்சாளரான துஷ்மன்த சமீர நியமிக்கப்பட்டுள்ளார்.

கனவில் கூட நான் நினைக்கவில்லை உலகக் கிண்ண அணியில் தேர்வு செய்யப்படுவேன் என்று. இறுதி நேரத்தில் கிடைத்த இந்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி அணியின் வெற்றிக்கு துணை புரிய முயற்சிப்பேன் என துஷ்மன்த சமீர தெரிவித்துள்ளார்.

## விரைவில் இல்லற இனிங்ஸ்



பிரிட்டன் ரென்னிஸ் வீரர் ஆன்டி முர்ரே, சியர்ஸ் திருமணம் வரும் ஏப்ரலில் இடம்பெறவுள்ளது.

பிரிட்டனின் நட்சத்திர ரென்னிஸ் வீரர் ஆன்டி முர்ரே, (27). இதுவரை யு.எஸ்.,(2012), விம்பிள்டன் (2103) என இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார். கடந்த (2012) லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். சமீபத்தில் நடைபெற்ற அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச்சிடம் வீழ்ந்தார். கடந்த 2005இல் கிம் சியர்சுடன் பழக ஆரம்பித்தார். போட்டியின்போது, அரங்கிலிருந்து முர்ரேவுக்கு ஆதரவு கொடுத்து வந்தார்.

இவர்களின் திருமண நிச்சயதார்த்தம் கடந்த நவம்பரில் நடந்தது. எதிர்வரும் ஏப்ரல் 11இல் இவர்களது திருமணம் நடக்கவுள்ளது. ஸ்கொட்லாந்தில் உள்ள முர்ரேவுக்கு சொந்தமான முர்ரே குரோமிக்ஸ் ஹவுசில் திருமணம் செய்யவுள்ளனர்.

## ஆனந்தின் முதல் வெற்றி



8 முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள கிளாசிக் சதுரங்கப் போட்டி ஜேர்மனியின் படேனில் நடைபெற்று வருகிறது. 7 ரவுண்ட் கொண்ட இந்தப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 6ஆவது சுற்றில் முன்னாள் உலக சம்பியன் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த். ஜேர்மனி வீரர் டேவிட் பராமிட்ஜியை எதிர்கொண்டார். சாதுர்யமாகச் செயற்பட்ட ஆனந்த் 65ஆவது நகர்த்தலுக்கு பின் டேவிட்டை தோற்கடித்தார்.

தொடர்ந்து 2 தோல்விகளை சந்தித்த ஆனந்த் இந்த ஆண்டில் பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.



சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் சிறப்புற நடைபெற்றபோது.... (20)

## விளையாட்டுச் செய்திகள்

## மானிப்பாய் மெமோறியலில் இல்ல மெய்வல்லுநர்

(மானிப்பாய்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ரீ. மாதவன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி காமம் கல்வி வலய கணக்காளர் திருமதி கே பார்த்தீபன், விசேட விருந்தினர் களாக மானிப்பாய் மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி பீ. விசாகன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சிவானந்தராசா, சிறப்பு விருந்தினர் களாக ஓய்வுநிலை முன்னாள் உபஅதி பர் எஸ்.ஜெயவீரசிங்கம், பழைய மாண வர் சங்க உபதலைவர் - கணக்காளர் எம்.இராசேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## முல்லையின் முத்துக்களுக்கு கௌரவிப்பு

(முல்லைத்தீவு)


கடந்த ஆண்டுக்கான அகில இலங்கை ரீதியிலான போட்டிகளில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட வீரர்களைக் கௌர விக்கும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி சனிக் கிழமை முல்லைத்தீவில் நடைபெற்றது.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக் கும் வகையில் வடமாகாணசபை உறுப் பினர் துரைராசா ரவிகரனின் கடந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், ஒரு இலட்சம் ரூபாவினை ஒதுக்கியிருந்தார்.

இந்நிகழ்வில் கரைத்துறைப்பற்று பிர தேச விளையாட்டு உத்தியோகத்தர் க.மாதவ ஜெய பரதாஸ், அந்தோனிப் பிள்ளை மற்றும் பல சாதனையாளர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய மட்டப் போட்டிகளில் சாதித் தோர், கா.நாகேந்திரன் (கராத்தே 3ஆம் இடம், குத்துச்சண்டை 3ஆம் இடம்), டிலக்சனா (பாடசாலை மட்ட குத்துச் சண்டை 2 ஆம் இடம்), கனிஸ்ணவாணி (பாடசாலை மட்ட குத்துச் சண்டைப் போட்டி 2 ஆம் இடம்) கெவின் (பாட-சாலை மட்ட குத்துச் சண்டை 2 ஆம் இடம்) சுதாகர் (பாடசாலை மட்ட குத்துச் சண்டைப்போட்டி 3ஆம் இடம்) பினே காஸ் (பாடசாலை மட்ட குத்துச் சண டைப் போட்டி 2 ஆம் இடம்)

மாகாண மட்ட போட்டிகளில் சாதித் தோர் கா.நாகேந்திரன் (கராத்தே 1ஆம் இடம், குத்துச் சண்டை 1ஆம் இடம், மல்யுத்தம் 1 ஆம் இடம்), சி.சிறிஜன



னன்- குத்துச் சண்டை 1 ஆம் இடம், தைக்வொண்டு 1ஆம் இடம், நீச்சல் போட்டி 1ஆம் இடம்), ஆதவன் (தைக் வொண்டு 2ஆம் இடம்), றொக்சன் (தைக்வொண்டு 1 ஆம் இடம்), கனிஸ்டன் (தைக்வொண்டு 2ஆம் இடம்), றொபின் (மல்யுத்தம் 1ஆம் இடம்), றொக்சன் (மல்யுத்தம் 1 ஆம் இடம்), ஜோன் சுதர்சன் (குத்துச் சண்டை 1ஆம் இடம்), ராசேந்திர குமார் (மல்யுத்தம் 1 ஆம் இடம்), அனோஜன் (குத்துச் சண்டை 1 ஆம் இடம்), லெறின்லால் (குத்துச் சண்டை 1ஆம் இடம்), நந்தினி (கராத்தே 1ஆம் இடம்), சிவனேஸ்வரி (கராத்தே 2 ஆம் இடம்), ராதிகா (தைக்வொண்டு 1ஆம் இடம், கராத்தே 2ஆம் இடம்). கார்த்திகா (குண்டு எறிதல் 1ஆம் இடம், தட்டு எறிதல் 1ஆம் இடம்), விதுஸ்டன் (400 மீ. அஞ்சலோட்டம் 2ஆம் இடம். 800 மீ. அஞ்சலோட்டம் 2ஆம் இடம்). குமார் (தைக்வொண்டு 1ஆம் இடம்). சாமந்தி (கிரிக்கெட் 1 ஆம் இடம்). டிலக்சன் (நீச்சல் 1 ஆம் இடம்). (160)

## கிண்ணம் வென்றது சென். மேரிஸ்

(உரும்பிராய்)

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட, அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை நாவாந்துறை சென். மேரிஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 30 அணிகள் பங்குபற்றிய இப்போட்டித் தொட ரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதின.


முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி கோல்கள் அடித்தன. ஊரெழு றோயல் அணியின் தர்மகுலநாதன் கஜகோபன் ஹட்ரிக் கோல் அடித்தார். பதிலுக்கு சென்.மேரிஸ் அணியின் அருள்ராசா ஜுட், ஜெனிஸ்ரன், பிரேமானந்தன் ஜெனட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல் அடித்தனர். முதல் பாதியாட்டம் தலா 3 கோல்கள் அடிக்கப்பட்ட நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணியின் ஆதிக்கமே அதிகமாக இருந்தது. றோயல் அணியின் தாக்குதல் ஆட்டத்தை சமாளித்த சென். மேரிஸ் அணிக்கு முன்கள வீரர் மரியதாஸ் நிதர்சன் அடுத்தடுத்து 2 கோல்களைப் பெற்றுக்கொடுத்து அணியை முன்னிலைப்படுத்தினார். றோயல் அணியால் பதில் கோல் எதுவும் பெறமுடியவில்லை. நிறைவில் சென்.மேரிஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இறுதிப்போட்டியின் நாயகனாக றோயல் அணியின் தர்மகுலநாதன் கஜகோபன், தொடர்நாயகனாக சென். மேரிஸ் அணியின் அருள்ராசா ஜுட், சிறந்த கோல் காப்பாளராக சென். மேரிஸ் அணியின் எஸ்.சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த அனுபவ வீரராக எஸ்.தர்மகுலநாதன் தெரிவு செய்யப்பட்டார்.



## விக்ரம்-இராஜன்-கங்கு கிண்ணம் ஜொலிஸ்ரார் அணி வசம்



கொக்குவில் வளர்மதி சனசமூக நிலை யம் வருடாவருடம் நடாத்தும் விக்ரம் - ராஜன் - கங்கு கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது. அழைக்கப்பட்ட அணிகள் பங்கு பற்றிய இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார் அணி முதலில் களத்தடுப் பைத் தேர்வு செய்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 31.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜாம்ஷன் 19, சுபாஷ் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பகீரதன் நான்கு, மதுஷன் மூன்று, வாமணன், ஜனார்த்தனன், கல் கோகன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 126 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி என்ற நிலையில் கள மிறங்கிய ஜொலிஸ்ரார் அணி மதுஷன். சஜீகன் ஆகியோரின் பொறுப்பான ஆட் டத்தின் மூலம் இலகுவாக வெற்றி பெற்றது. ஜொலிஸ்ரார் அணி 21.2 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட் டுக்களை மட்டும் இழந்து வெற்றியி லக்கை அடைந்தது. இதில் மதுஷன் 42, ஆட்டமிழக்காது சஜீகன் 25, மணி வண்ணன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அலன் 35 ஓட்டங்களைக் கொடுத்து இரு விக்கெட்டுக்களையும் கைப் பற்றினார். இதன் மூலம் ஜொலிஸ்ரார் அணி விக்ரம், ராஜன் - கங்கு வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போட்டியின் சிறப்பாட்டக்காரர் மற்றும் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதை ஜொலிஸ்ரார் அணியின் மது ஷன் (152 ஓட்டங்கள், பத்து விக்கெட் டுக்கள்), இறுதிப்போட்டி (42 ஓட்டங்கள். 3 விக்கெட்டுக்கள்) பெற்றார்.

# யாருக்கு தொப்பி?

- எஸ்.எம்.எம்.பஷீர் கட்டுரையிலிருந்து.



இதுவரையும் கிழக்கிலே இரண்டு முதல்வர்கள் இரண்டு பிரதான சமூகங்களில் இருந்து "அரசோச்சி" உள்ளார்கள். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்க சந்திரகாந்தனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நஜீப் எ மஜீதும் தேசியக் கட்சியின் பிரதி நிதிகளாக முதல்வர் பதவியினை வகித் தாலும் அவர்களை கிழக்கு பிரதேசத் தில் செல்வாக்குப் பெற்ற பிரதான தமிழரினதும் முஸ்லிம்களதும் இரு கட்சிகளும் முறையே தமிழராக-வோ அல்லது ஒரு முஸ்லிமாகவோ அங்கீகரிக்கவில்லை.

தங்கள் கட்சியில் உள்ள ஒரு தமிழரை முதலமைச்சராக நியமித்தால் மட்டுமே அவர் தமிழர் என்பது போல தமிழ் கூட்ட மைப்பும், தங்கள் கட்சியில் உள்ள ஒரு முஸ்லிமை முதலமைச்சராக நியமித்தால் மட்டுமே அவர் முஸ்லிம் என்பது போல முஸ்லிம் காங்கிரசும் நடந்து கொண்டனர். மக்களின் மனதிலும் அந்த சிந்தனையோட்டம் பலமாக வேரூன்றி இருந்தது.

இனவாத அரசியல் கட்சிகளின் இடையறாத முயற்சியினால் இனவாத அரசியல் பலம் வாய்ந்த தாக தனது வேர்களை வடக்கிலும் கிழக்கிலும் ஊன்றிக் கொண்டதால் வடக்கிலும் கிழக்கிலும் அத்தகைய மக்கள் எதிர்பார்ப்பும் சகஜமாகவே அமைந்து விட்டது.

ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பு அரசு முதலமைச்சராக சந்திரகாந்தனை நியமித்தது. ஆக்ரோசமாக கட்சிக் கூட்டில் இருந்து விலகப் போவதாக அட்டகாசம் செய்த ஹிஸ்புல்லாஹ்வை அரசு அமைதிப்படுத்தியது.

சந்திரகாந்தன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது அவருக்கு ஆதரவு வழங் கக் கூடாது என்று கூக்குரலிட்ட கூட்டமைப்பு, அவர் முதலமைச்சர் ஆக்கப்பட்டதும் அவரை ஒரு தமிழ் முதல மைச்சர் என்று அங்கீகரிக்கவில்லை. (மாற்றுக் கட்சியில் இருப்பவர் எப்படி தமிழராக முடியும்? "துரோகி" என்பதே அவர்களது அரசியல் பண்பாடு!)

முதலாவது கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிரணி வேட்பாளர் ஹக்கீமுக்கு மறைமுக ஆதரவு வழங்கியதும் கூட தெரிந்த செய்திதான். ஹக்கீம் வெற்றி ஈட்டி, ஒருவேளை முதலமைச்சர் ஆகி இருந்தால் அப்பொழுது நாங்கள் என்ன செய்ய என்று வாளாவிருந்திருப்பார்கள்.

மாகாண சபை தீர்வாகாது, அதில் போட்டி இடுவது, மாகாண சபையை அங்கீகரிப்பதாக ஆகிவிடும், அதனைப் புறக்கணிக்க வேண்டும் என்பது புலிக-ளின் கீழ் செயற்பட்ட கூட்டமைப்பின் கொள்கையாக இருந்தது!

ஆனால் புலிகளின் முடிவுக்கு பின்னர் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் குதித்த னர். வெற்றி ஈட்டினர். மாகாண சபை தீர்வாகாது ஆனாலும் அதனை இப்போ தைக்கு பயன்படுத்த வேண் டும் என்று தங்களின் வழக்க மான புராணங்களைப் பாடினர்.

"மெத்தப்படித்த" முன்னாள் நீதியரசர் முதலமைச்சர் வேட்பா ளராக நிறுத்தப்பட்டு வெற்றி ஈட்டினார். அவர் தனது மனச் சாட்சிக்கு முரணாக முதலமைச்சர் ஆக வேண்டும் என்பதற்காக பிரபாகரனை போற்றிப் புகழ்ந்தார்.

கற்றவர்க்கு அழகு கசடற மொழி தல் "கல்விக்கு அழகு கசடற மொழி தல்" (வெற்றிவேற்கை). ஆனால் கூட்டமைப்புடன் சேர்ந்த சில நாட்க ளிலே நீதியரசர் கசடுற மொழியத் தொடங்கி விட்டார். இன்று வரை கற்ற அவரின் பேச்சும் செயலும் கரைதேர்ந்த கூட்டமைப்பு கடைத்தர அரசியல்வாதிகளை எல்லாம் மிஞ்சி விடும் அளவு இருப்பதனை அவரின் அரசியலை நன்கு அவதானிப்பவர்கள் புரிந்து கொள்ளலாம்!

நாடளாவிய ரீதியில் கிழக்கிலே முதலில் முதலமைச்சராகவிருந்த சந்திர காந்தன் பெரிய கல்வி அறிவு பெற்றவரல்ல, முன்னாள் புலி இயக்க உறுப்பினர், ஆயுதம் தரித்து மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். ஜனநாயக அரசியலுக்குள் நுழைந்தவர். ஆனாலும் பின்னர் அவரைத் தொடர்ந்த வந்த நஜீப் ஏ மஜீதை விட அவர் நன்றாக செயற்பட்டார் என்பதாக முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் பகிரங்க மாகவே சொன்னவை பதிவுகளாக உள்ளன.

ஆனால் சென்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒரு முஸ்லிம் முதலமைச்சராக வர தாங்கள் ஆதரவு அளிப்பதாக முஸ்லிம் காங்கிரசின் ஆதரவை கோரி நின்ற தமிழர் கூட்டமைப்பு, தேர்தலின் பின்னர் தங்களுக்கு ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் வழங்கவில்லை என்பதற்காக முஸ்லிம் காங்கிரசை மிகக் கேவலமாக விமர்சிப்பதில் முனைப்புடன் செயற்பட்டனர். அப்பொழுதான் அதுவரை முஸ்லிம் காங்கிரஸ் மீது பற்றும் பாசமும் கொண்ட தமிழ், கூட்டமைப்பின் சந்தர்ப்பவாதம் வெளிப்பட்டது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் மிக உருப்படியான முடிவினை அப்பொழுது எடுத்திருந்தது. அந்த முடிவின் இரண்டாவதும் இறுதியானதுமான நிகழ்வே முஸ்லிம் முதலமைச்சரின் முஸ்லிம் காங்கிரஸ் இப்பொழுது பெற்றுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லிம் மக்கள் மீதான பரிவும் பாசமும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் எப்படி போலியா னது என்பதை முதலமைச்சர் முடிவு-கள் நிரூபித்தனவோ, இப்பொழுதும் முதலமைச்சரைப் பகிர்ந்து கொள்வதில் முஸ்லிம் காங்கிரசின் முடிவு, தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் எந்தக் காலத்திலும் எந்த உடன்பாட்டையும் முஸ்லிம்கள் செய்யக் கூடாது என்பதை சொல்லாமல் சொல்லி நிற்கிறது.

# இனி இணையம் மறைந்துவிடும்...




இணையம் இல்லாமல் நாம் இனி வாழ முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நாம், அதிர்ச்சியடையும் விதமாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார் கூகுள் நிறுவனத்தின் தலைவர் எரிக் ஸ்மித். அதாவது "இனி இணையம் மறைந்துவிடும்" என்று எரிக் ஸ்மித் கூறுகிறார்.

இணையத்தின் ஓர் அங்கமாக இருக்கும் கூகுள் நிறுவனத்தின் தலைவராக இருந்துகொண்டு எப்படி இதைக் கூறுகிறார் என்பதைத் தெரிந்துகொள்ள மேலே படியுங்கள். சென்ற மாத இறுதியில், உலகப் பொருளாதார மாநாட்டில் உரையாற்றுகையில் இந்தகருத்தினை வெளியிட்டார் எரிக் ஸ்மித்.

தொடர்ந்து உரையாற்றுகையில், இப்போது இணையம் என்பது, நம் வாழ்வில் பிரித்துப் பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில், இந்தப் புவி எங்கும், நம் அனைவரையும் இணையம் சூழ்ந்திருக்கும் என்றார். நாம் அன்றாடம் பயன்படுத்தும் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் இணையத்துடன் இணைந்ததாக இருக்கும். நாம் அணியும் ஆடைகள் உட்பட அனைத்திற்கும் இணைய முகவரிகளும், இணைய இயக்கத்தை அறியும் சென்சர்களும் இருக்கும்.

எடுத்துக் காட்டாக, ஒருவர் ஓர் அறையில் நுழைந்தால், உடனே அந்த அறை, நாம் அணிந்திருக்கும் ஆடையை உணர்ந்து, நாம் யார் என்று அறிந்துகொண்டு, அந்த அறையில் இருக்கும் பொருட்களைப் பயன்படுத்த அனுமதி அளிக்கும். மாறாக அனுமதிக்கப்படாதவராக அவர் இருந்தால், அவரை அனுமதிக்காது. அனைத்து பொருட்களின் இயக்கத்தினையும் முடக்கிவிடும்.

இது போல, எங்கும் எதிலும் இணையம் இருக்கும் என்பதால், இணையம் என்ற ஒன்றை நாம் தனித்துப் பார்க்க இயலாது. அந்த இலக்கினை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்றார் எரிக் ஸ்மித். இதற்கான திட்டங்களை கூகுள் மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

இன்னும் உலக அளவில் 500 கோடி பேருக்கு மேல் இணைய இணைப்பு இல்லாமல் இருக்கும் சூழ்நிலையில் இது சாத்தியமாக்கப்பட்டால், அது மானிட சரித்திரத்தில் பெரிய மாற்றமாக இருக்கும்.



# 39 தத்துக் குழந்தைகள்

சீனாவின் ஷனாஜி மாகாணத்தை சேர்ந்தவர், கோங் ஜெனியர் 65 வயதான இவர், இரக்க மனம் படைத்தவர். பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள், மனநலம் குன்றிய மற்றும் ஊனமுற்ற குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வருகிறார். 40 ஆண்டுகளாகவே இந்த சேவையை செய்து வரும் இவரிடம், தற்போது, 39 குழந்தைகள் வளருகின்றனர். ஆனால், சீன அரசின் சட்டப்படி, ஒருவர், மூன்று குழந்தைகளை மட்டுமே தத்தெடுக்க முடியும். இச்சட்டத்தை இவர் மீறியுள்ளதால், கோங் ஜெனியாவை கண்டித்துள்ள சீன அரசு, அவருக்கு அளித்து வந்த நிதி உதவியை இரத்துச் செய்து விட்டது. இதுபற்றி ஜெனியா கூறுகையில், "இத்தனை ஆண்டுகளாக மௌனமாக இருந்த அரசு, இப்போது கண்டிப்பு காட்டுவது ஆச்சர்யமாக உள்ளது. அன்பும், இரக்கமும் காட்டுவதற்கு கட்டுப்பாடோ, அளவோ நிர்ணயிக்க முடியாது. அரசு உதவி செய்யாவிட்டாலும், என்னிடம் வளர்ந்த குழந்தைகளில் பலர், இப்போது நல்ல நிலையில் உள்ளனர். அவர்கள் உதவியுடன் என் சேவையை தொடர்வேன்..." என, உறுதியுடன் கூறுகிறார்.




# பூனைகளுக்கு நன்றி!

ஒரு நோய் வந்தால், அதை அறிகுறிகள் மூலம்தான் தெரிந்து கொள்ள முடியும். இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்டெபனி டூடி என்ற இந்தப் பெண்ணுக்கு வயிற்றில் உள்ள குடல் வால் அருகில் ஒரு கட்டி வந்தது. ஆனால் அதற்கான எந்த அறிகுறியும் இல்லாததால் எப்போதும் போல் வேலைகளைப் பார்த்துக் கொண்டு, தான் வளர்க் கும் பூனைகளுடன் ஜாலியாக இருந்திருக்கிறார் அவர்.

ஆனால் இந்தப் பூனைகள் அவர் அமர்ந்திருக்கும்போ தும், படுத்திருக்கும்போதும் அவர் அருகே வருவதும், வயிற்றை முகர்ந்து பார்ப்பதும், அடிவயிற்றில் முகத்தை வைத்து மோதுவதுமாக இருந்திருக்கின்றன.

சந்தேகப்பட்ட அவர், நோர்த் ஹாம்ப்ஷையரில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று சோதித்துப் பார்த்திருக்கிறார். அப்போதுதான் தெரிந்தது, அவருக்கு குடல்வாலில் கட்டி ஏற்பட்டு, அதில் புற்றுநோய் வந்திருப்பது. மருத்துவச் சிகிச்சைக்குப் பிறகு உயிர் பிழைத்த அவர் நன்றி சொல்வது கடவுளுக்கு அல்ல, தனது அருமைப் பூனைகளுக்கு.



இன்றைக்கு சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே கண்ணாடி உபயோகத்தில் இருந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஃபினிஷியா நாட்டு மக்களே முதன்முதலாக செயற்கைக்

# கண்ணாடி எப்படி வந்தது?

கண்ணாடியைத் தயாரித்தனர் என்பது வரலாறு.

கண்ணாடி தயாரிப்பு தற்செயலாக நடந்தது என்பது வியப்பிற்குரியது. சிரியாவில் ஒரு பாலைவனத்தில் வழிப்போக்கர்கள் அடுப்பு மூட்டி சமையல் செய்து முடித்தபின், அடுப்பின் அடிப்பாகத்தில் பளபளப்பான ஒரு பொருள் படிந்திருந்ததைக் கண்டனர். இதுவே செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட முதல் கண்ணாடியாகும். இன்றைய நவீன யுகத்தில் கண்ணாடியின் தேவை மிக அதிகம். எனவே உலைகளின் மூலம் ஏராளமான அளவில் இது தயாரிக்கப்படுகிறது. மிகச் சாதாரணமான மூலப்பொருள்களைப் பயன்படுத்தி கண்ணாடி உண்டாக்கப்படுகிறது. மணல் (அதாவது சிலிக்கன் டையொக்ஸைட்) சோடியம் காபனேற், கல்சியம் காபனேற் ஆகியவற்றை "தக்க அளவில் கலந்து" அதிவெப்ப உலைகளில் சுமார் 1500 செல்ஸியஸ் வெப்ப நிலைக்கு சூடாக்கினால் திரவ வடிவில் கண்ணாடி உண்டாகும். சில விசேஷ வகை கண்ணாடிகள் தயாரிப்பில் காரீய காபனேற், போரிக் ஒட்சைட் போன்றவை கூடுதலாகப் பயன்படுத்தப்படும். உடைந்த கண்ணாடித் துண்டுகளை மூலப்பொருள்களுடன் கலந்தால் கண்ணாடியின் உற்பத்திச் செலவு குறையும்.

அழுத்துதல், ஊதுதல் மற்றும் அச்சுக்களில் வார்த்தல் ஆகிய முறைகளில் கண்ணாடிப் பொருள்கள் செய்யப்படுகின்றன.

வண்ணக்கண்ணாடி ஏனைய மூலப்பொருள்களுடன் சில உலோக ஒட்சைட்கள் கலக்கப்பட்டு உலைகளில் உருக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்றது. குரோமியம் ஒட்சைட் பச்சை நிறத்தையும், கோபால்ற் மற்றும் தாமிர ஒட்சைட் நீல நிறத்தையும், ஸைலினியம் ஒட்சைட் சிவப்பு வண்ணத்தையும் கண்ணாடிக்கு ஊட்ட வல்லவை. அலுமினிய ஒட்சைட்டுடன் பொஸ்பேற் உப்புகள் கலக்கப்பட்டு பால் நிற வெண்மைக் கண்ணாடி தயாரிக்கப்படுகிறது.

## பறவைகள் எச்சம் தந்த வாழ்வு!




பறவைகள் எச்சம், ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியுமா? முடியும் என நிரூபித்து இருக்கிறது, நௌறு என்ற சின்னஞ்சிறிய நாடு. அவுஸ்ரேலியா - சிட்னியில் இருந்து, 4,000 கி.மீ., தொலைவில், 12 சதுர கி.மீ., பரப்பளவில் அமைந்துள்ள, இந்நாட்டின் மக்கள் தொகை, 10 ஆயிரம் மட்டுமே! தண்ணீரால் சூழப்பட்ட இந்நாட்டிற்கு, இலட்சக்கணக்கான வெளிநாட்டுப் பறவைகள் வந்து செல்கின்றன. இப்பறவைகள் வெளியேற்றும் எச்சம், பூமியில் கலந்து அருமையான உரமாகி விடுகிறது. இந்த மண்ணை, மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், பெரும் பொருள் ஈட்டலாம் என்று நினைத்து, பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று, 1968இல் மண் ஏற்றுமதியை தொடங்கியது. இதனால், நௌறு நாட்டு மக்களின் வருமானம் பெருமளவில் உயர்ந்து, வாழ்க்கை வசதிகள் அதிகரித்து விட்டன.



எந்த விளக்கமும் தேவையில்லை

# கமல் 60 சிறப்பு மலர் ஓர் பார்வை

- சி.விமலன்

நடிகர் கமலஹாசனின் மணிவிழா மலராக குமுதம் சஞ்சிகை "கமல் 60 சிறப்பு மலர்" வெளியிட்டுள்ளது. எழுத்தாளர் மணா அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ள இந்த மலரில் இயக்குநர்கள், சக நடிகர்கள், தயாரிப்பாளர்கள், எழுத்தாளர்கள், ஓவியர், பின்னணிப்பாடகர், பரத நாட்டியக் கலைஞர், ஒளிப்பதிவாளர், இரசிகர் மன்றத்தினர், கமலின் உடற்பயிற்சியாளர் என பலதரப்பினரும் கமல் குறித்த தமது மனப்பதிவுகளையும் அனுபவத்தினையும் பதிவுசெய்துள்ளனர்.

எழுத்தாளர்கள் வரிசையில் வண்ணநிலவன், சுகுமாரன், ஜெயமோகன், இரா.முருகன், தொ.பரமசிவன் ஆகியோரது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. வண்ணநிலவன் "அவள் அப்படித்தான்" திரைப்படத்தில் கமலுடன் பணியாற்றிய அனுபவத்தை தற்பொழுது படிக்கும் பொழுது மறைந்த இயக்குநர் ருத்ரையாவின் நினைவு கூரலாகவே அது எனக்குத் தோன்றுகிறது.

தென்னிந்திய சமூகத்தை நோக்கி வைக்கப்பட்ட ஒரு பெரிய கண்ணாடி அதில் ஆயிரக்கணக்கான முகங்கள் பிரதிபலித்துச் சென்றிருக்கின்றன. அந்த முகங்களைத் தொகுத்து தென்னகத்தின் அரை நூற்றாண்டு கால பண்பாட்டு வரலாற்றை கமலை வைத்தே எழுதி விடமுடியும் என்கிறார் ஜெயமோகன்.

கலைத்தன்மையுள்ள படங்களில் காட்டும் நடிப்புக்கும் வெறும் பொழுது போக்குப் படங்களின் நடிப்புக்கும் இருக்கும் வித்தியாசத்தை மலையாளத் திரையுலகுக்கு மறைமுகமாகக் கற்பித்தவர் கமலஹாசன் என்று கூறும் எழுத்தாளர் சுகுமாரன் சேது மாதவன், எம்.டி.வாசுதேவன் நாயர், ஐ.வி. சசி போன்றவர்களின் படங்களில் நடிக்க முடிந்த கமலுக்கு அன்றைய சீரிய இயக்குநர்களான பரதன், பி.பத்மராஜன், கே.ஜி.ஜார்ஜ் போன்ற இயக்குநர்களின் படங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. கமலின் நடிப்பில் ஆரம்பத்தில் இருந்த கலைத்தன்மையுள்ள அப்பாவித்தனம் பின்னர் காணாமற் போனது ஒரு காரணம். அவர் ஏற்கும் எல்லா வேடங்களிலும் கதாபாத்திரத்தின் மனநிலையை முந்திக் கொண்டு கமல்ஹாசன் இந்தப் பாத்திரத்தை செய்கின்றார் என்ற துருத்தல் வெளிப்பட்டு விடுவது இன்னொரு காரணம். அதை விட அவர் இதற்குள் துருவ நட்சத்திரமாக எட்டாத் தொலைவுக்குச் சென்றிருந்தார். அவரை வைத்துப் படமெடுப்பது கச்சிதமான பட்ஜெட்டில் சினிமா தயாரிக்கும் மலையாளிகளால் முடியாத காரியம் என்று சில உண்மைகளை போட்டுடைக்கிறார். இம்மலரில் உள்ள சிறந்த கட்டுரையென்று இதனைத்தான் சொல்வேன்.

உலகளவில் ஒரு நடிகரை பல்வேறு கோணங்களில் சித்திரித்த பெருமையை ஓவியர் ஸ்ரீதர் பெற்றுள்ளதை இம்மலரின் ஊடாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. கமலை 160 கோணங்களில் அவர் ஓவியமாகப் படைத்துள்ளார்.

இவ்வாறான ஒரு தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களைவிட இடம்பெறாத ஆக்கங்கள் குறித்த சர்ச்சை தோன்றுவது வழமையான ஒன்று




தான். அந்தவகையில் எனது மேலோட்டமான வாசிப்பின் பொழுதும் சில விடுபடல்கள் இருந்ததை உணரக்கூடியதாக இருந்தது.

"அன்பே சிவம்" படத்தில் இடம்பெற்ற வீதி நாடகம் குறித்து மலரில் ஒரு குறிப்பு வந்தாலும் பிரளயனின் நாடகக்குழுவினரே அதில் நடித்திருந்தனர். அந்த அனுபவம் குறித்த பதிவை பிரளயன் வாயி லாகவே இடம்பெறச் செய்திருந்தால் கமலின் இன்னொரு பரிமாணத்தை அது வெளிப்படுத்தியதாக இருந்திருக்கும்.

அவ்வாறே "விஸ்வரூபம்" படத்தில் இடம்பெற்ற "உன்னைக் காணாத" பாடலுக்கு கமலுக்கு நாட்டியத்தை பயிற்றுவித்த கதகளி ஆசிரியரான பண்டிற் ஸ்ரீ பிரிஜு மகாராஜ் அவர்களது கருத்தையும் மலரில் சேர்த்திருக்கலாம். ஆனால் கமலின் அபிநயம் குறித்து நாட்டிய மயில் டாக்டர் பத்மா சுப்ரமணியம் அவர்களது குறிப்பு வெளிவந்துள்ளது.

சகலகலா வல்லவனான கமலஹாசனின் பன்முகப்பரிமாணத்தை வெளிப்படுத்தும் விதமாக பாடலாசிரியர், பாடகர் போன்ற அவரது பங்களிப்பையும் குறைந்த பட்சம் பட்டியல் படுத்தியாவது இருக்கலாம்.

எழுத்துலகில் கமல் என்ற பகுதியில் கமல் எழுதிய தாயம்மாள், சுதந்திர(மான) கவிதை என்ற இரண்டு கவிதைகளும் அவர் நடத்திய "மய்யம்" இதழ் ஒன்றில் அவர் எழுதிய தலையங்கமும் களத்தூர் கண்ணம்மா முதல் கல்யாண ராமன் வரை என்கிற தலைப்பில் குமுதத்தில் அவர் எழுதி வெளிவந்த தொடரில் இருந்து ஒரு பகுதியும் வெளிவந்துள்ளது. இம்மலரில் இடம்பெற்றுள்ள அவரது பேட்டியில் ஒரு எழுத்தாளர் என்று அறியப்படுவதில் தான் எனக்கு விருப்பம் என்று அவர் தெரிவித்துள்ள நிலையில் இப்பகுதியில் கட்டாயம் இடம்பெற்றிருக்க வேண்டிய அவர் எழுதிய நூலான "தேடித் தீர்ப்போம் வா" பற்றிய பதிவு எதுவும் இல்லாதது குறைபாடாகும்.

ரா.சி.அழகப்பன் மய்யம் இதழுக்கு துணையாசிரியராக கடமைபுரிந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களை எழுதியுள்ளார். அதில், ஒருமுறை கமல் "மழைக்கும்" என்ற வார்த்தையை எழுதினார். அதென்ன மழைக்கும் என்று சந்தேகம் கேட்டேன். மழை பொழிவதைத் தான் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

எழுத்தாளர் சுஜாதாவும் மழை பெய்தல் என்பதை மழைத்தல் எனும் சொல்லின் வாயிலாக அறிமுகப்படுத்தி இருந்தபோதிலும் அது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கமலும் சுஜாதாவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தமை நாம் அறிந்தது தான். இப்புதுச் சொல்லாக்கத்தில் இருவருமே வெவ்வேறு சொற்களை பிரயோகித்திருந்தமையும் அறியக்கூடியதாக உள்ளது.

இவ்விடயத்தில் சுஜாதா ஆழ்வார் பாடல் ஒன்றில் "கண்டனர்களும் கேட்டனர்களும்" என்ற வரியை சுட்டிக்காட்டி கண்டனர், கேட்டனர் என்றாலே பன்மை தான் அவற்றோடு "கள்" விகுதி சேர்ந்த பொழுது மொழி இறந்தா விட்டது. எனவே மொழியில் அவ்வாறான மீறல்கள் ஏற்பட்டாலே அதன் ஆயுள் நீடிக்கும் என்பதை மழைத்தல் சொல் குறித்த சர்ச்சையின் போது தெரிவித்திருந்தமையும் நினைவுக்கு வருகின்றது.

கமல் எனும் நடிகனின் ஐம்பது வருட கால திரையுலக விஸ்வரூபத்தின் சில பக்கங்களையாவது ஒரேபார்வையில் புடிக்கும் படியாக குமுதம் வெளிக்கொணர்ந்துள்ளதை பாராட்டலாம்.

# இலக்கிய படைப்பாளிகளை ஊக்குவிக்க கலை நிறுவனங்கள் முன்வரவேண்டும்

## பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களின் எணணிக்கை அண்மைக்காலங்களில் குறைவடைந்து செல்கின்றது. கடந்த 30 வருடங்களாக இருந்த நிலை இப்பொழுது மாற்றப்பட்டு கலை இலக்கியங்கள் மீளவும் இயங்குதளத்திற்குச் செல்கின்றன. அதற்கான சூழல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழலைப்பயன்படுத்தி பல இலக்கியம் சார் நிறுவனங்கள் செயற்பாடுகளினை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

ஈழத்தின் முன்னணி எழுத்தாளர அமரர் எஸ்.பொ.வின் நினைவஞ்சலி நிகழ்வும் திருவுருவப் படத்திற்கான திரை நீக்க நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் இவ்வாறான நிறுவனங்களின் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும். அனைவருக்கும் கருத்துச்சுதந்திரம் காணப்படுகின்றது.

முப்பது வருடங்களுக்கு முன்பிருந்த இலக்கியம் மீதான போட்டி நிலை இப்பொழுது குறைவடைந்து காணப்படுகின்றது. தொடர்ச்சியாக இலக்கிய மன்றங்களின் செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படவேண்டும். காணப்படுகின்ற இலக்கியத் தேக்க நிலை நீக்கப்பட்டு மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும்.

எழுத்திலக்கியத்துறைக்காக பணியாற்றியவர்களுக்கு விழாக்கள் எடுக்கப்படவேண்டும். இலங்கைத் தமிழனின் சொத்தாக மறைந்த எழுத்தாளர் எஸ்.பொ. விளங்குகின்றார். தமிழ்நாடு முழுவதும் புகழ்பெற்றவராக போற்றப்படுவதுடன் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற இலக்கிய படைப்பாளியாகவும் விளங்குகின்றார். ஆனால் இவருக்கான அஞ்சலிகளும் மதிப்பளிப்புக்களும் அவர் பிறந்த இடமாகிய யாழ்ப்பாணத்தில் காணமுடியாது உள்ளமை கவலையளிக்கிறது.

இலக்கியங்களை படைப்பவர்கள் சமூகத்திற்கு வருவது குறைவாகக் காணப்படுகின்றது. பொருளாதார ரீதியில் சங்கங்கள் உருவாகி பொருளாதாரம் கல்விச் சமூகம் என்பவற்றில் அக்கறை காட்ட வேண்டும் என்றார். (63)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தினூடாக அண்மையில் வழங்கப்பட்டன. பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தனால் வழங்கப் பட்ட இவ் உதவிகள் கற்க ஆசையிருந்தும் கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இச் செயற்பாடுகள் ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தினூடாகமேற்கொள்ளப்பட்டன. முள்ளி பொது நோக்கு மண்டபத்தில் ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தின் தலைவர் F.X.D. கூரே தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தினர், மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (48)


# சுன்னாகம் வாழ்வகத்தால் விண்ணப்பங்கோரல்

யாழ்.சுன்னாகம் வாழ்வகத்தால் இவ்வருடத்திற்குரிய பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு தங்குமிடம், உணவு, கல்வி வசதிகள், ஏனைய வசதிகள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் எனவும் பார்வையற்ற பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளும் சமமாக கல்வியில் முன்னேறக்கூடிய வகையில் உரிய வாய்ப்பு வசதிகள் வழிகாட்டல்கள் என்பன வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர் தமது பிள்ளை பற்றிய விபரங்களுடன் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு பிந்தாமல் தலைவர் வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு கடிதம் மூலமாகவோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ள முடியும் என வாழ்வகத் தலைவர் அறிவித்துள்ளார்.

# அறநெறிப்பாடசாலையின் பெற்றோர் தினநிகழ்வு



அஹதிய்யா அறநெறிப் பாடசாலையின் பெற்றோர் தின நிகழ்வு யாழ்.ஒஸ்மானியாக கல்லூரியில் பிரதி தலைவர் மலாபிர தலைமையில் கடந்த ஞாயிற் றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் விசேட உரையாற்றும் போது அஹதிய்யா பாடசாலை சிறார்களுக்கு மார்க்க பாடங்களையும், ஒழுக்க விழுமியங்களையும கற்றுக்கொடுக்கின்றன. பெற் றோர்கள் கூடியகவனம் எடுத்து வாரத்தின் இறுதிநாளில் இடம் பெறும் இப் பாடசாலைக்கு சிறார்களை அனுப்பி, சிறந்த நற்பழக் கங்களை கற்றுக்கொடுக்க வேண்டும் எனக்கூறினார்.

ஒஸ்மானியாக் கல்லூரியின் ஆசிரியர் எம்.மிஸ்னூன், ஆசிரியை பஸ்மிளா, எம.ரஹிம் ஆகியோர் கலந்து கொண்டனர். இக் கலந்துரையாடலில் அஹ திய்யா மாணவர்களுக்குரிய உடைகள், பாடப்புத்தகங்கள், மற்றும் தேவைகள் பற்றியும் கலந் துரையாடப்பட்டன. (105)

# அன்னபூரணி அமைப்பால் அன்னதான நிகழ்வு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூசை மிக சிறப்பாக இம்முறை நடைபெறவுள்ள நிலையில் எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் அன்னபூரணி அமைப்பினரால் மகேஸ்வர பூசை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் பெருமளவான அடியார்கள் இம்முறை இவ் ஆலயத்திற்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் வருகைதரும் அடியார்களின் நலன்கருதி குறித்த அமைப்பினர் அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை இம்முறை திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு செல்வதற்கு ஏதுவாக விசேட பேருந்து மற்றும் புகையிரத சேவைகள் இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கிளி.யில் சிறுவன் மாயம் பொலிஸார் தீவிரவிசாரணை

(கிளிநொச்சி)



கிளிநொச்சி விவேகானந்த நகர் பகுதியில் 16 வயதுடைய நவரத்தினராசா கௌசிகன் எனும் சிறுவனை கடந்த 7 ஆம் திகதி மாலை முதல் காணவில்லை என கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நாள் அன்று கடைக்கு சென்று வருவதாக கூறிச் சென்ற சிறுவன், இதுவரை வீடு திரும்பவில்லை என பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த வருடம் சாதாரண தர பரீட்சை எழுதிவிட்டு, பெறுபேற்றுக்காக இவர் காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. காணாமற் போன விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் காலை, கிளிநொச்சி பொலிஸின் பெண்கள், சிறுவர் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (29)

## முரசின் இன்றைய பலன்

(11.02.2015 புதன்கிழமை)

ஐய வருஷம் தை மாதம் 28 ஆம் திகதி.
சப்தமி திதி. சித்தம் யோகம்.
சுவாதி நட்சத்திரம் பி.ப. 12.29 வரை. பின் விசாகம்.
இராகு காலம 12.34 - 02.04 வரை. சுபநேரம 05.04 - 06.34 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — அனுபவமில்லாத தொழிலில் இறங்க துணைவியார் தடுத்தல்.

**ரிஷபம்** — வாடகைக்கு மனை தேடி அலைந்ததால் தேக சௌக்கியம் பாதிக்கப்படல்.

**மிதுனம்** — கிரக தோஷத்தினால் விவாகம் தடைப்பட்டதை எண்ணிக் கவலையுறல்.

**கடகம்** — நோய்குணமடைய மருந்தில்லாத மருத்துவ முறையை நாடமுயலல்.

**சிம்மம்** — கடன்பளு அதிகரித்ததால் சொத்தின் ஒருபகுதியை விற்க ஆயத்தமாதல்.

**கன்னி** — போலிநாணயம். நகைகள் வந்தடையும் அபாய நிலை உண்டாகும்.

**துலாம்** — செய்யாத குற்றத்திற்கு வீண்பழி கேட்க நேரிடலாம்.

**விருச்சிகம்** — தொல்லை கொடுத்த சத்துருவின் கெடுதி நீங்கிவிடல்.

**தனுசு** — சிலநாட்களாக நிலவிக்காணப்பட்ட கருத்து முரண்பாடு நீங்கியதால் தம்பதியர் மத்தியில் மகிழ்ச்சி ஏற்படல்.

**மகரம்** — இலாபச் சனீஸ்வரன் இருப்பதினால் புதிய இடத்தில் வியாபாரம தொடங்க எண்ணமிடல்.

**கும்பம்** — திகதி தப்பிய மருந்து வில்லைகளினால் தேகநலம் பாதிக்கப்படல்.

**மீனம்** — அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களினால் பணவரவு ஏற்படலாம்.

# முல்லையில் உள்ளக கிராமங்களுக்கு

# இதுவரை மின்சார வசதி இல்லை

## கிராம மக்கள் விசனம் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பல கிராமங்களுக்கு மின்சார வசதிகள் வழங்கப்படாதுள்ளதாகவும், இதனால் தமது தொழில், வாழ்வாதாரம் என்பன பாதிக்கப்படுவதாகவும் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த யுத்த அனர்த்தங்கள் நிறைவு பெற்று 5 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இம்மாவட்டத்தில் பின்தங்கிய உள்ளூர் கிராமங்களில் சுமார் 40 வரையான கிராமங்களுக்கு மின்சார வசதிகள் வழங்கப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இக்கிராமங்களில் வாழும் மக்கள் நாளாந்தம் கூலித்தொழில் செய்பவர்களும், சுயதொழில் மேற்கொள்பவர்களாகவும் உள்ளதாகவும் மின்சார வசதிகள் வழங்கப்படாமையால் தமது தொழில் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக்கிராமங்களில் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ளும் மாணவர்கள் மின்சார வசதியின்றி மண்ணெண்ணெய் விளக்கிலேயே கல்வி கற்பதாகவும் பொதுப்பரீட்சைகளுககுத் தோற்றும் மாணவர்கள் இதனால் வெகுவாக பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் மின்சார வசதிகள் இல்லாமையால் விவசாய நடவடிக்கைகளும் முன்னெடுக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கும் இக்கிராம மக்கள் தமது அத்தியாவசிய தேவையாகவுள்ள மின்சார வசதியை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 171 மாணவர்கள் தெரிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் 2014 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் படி 171 மாணவர்கள் பல்கலைக்கழகத் திற்குத் தெரிவாகியுள்ளதாக வலயக் கல்வித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது,

கடந்த யுத்த அனர்த்தத்திற்கு பின்னர் தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி நிலை வளர்ச்சி கண்டு வரும் நிலையில் முல்லைத்தீவில் 171 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும் என கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அபிவிருத்தியில் ஓரளவு வளர்ச்சி கண்டு வரும் இம்மாவட்டத்தில் கஷ்டத்தின் மத்தியில் கல்வியை மேற்கொண்டு சிறந்த பெறுபேற்றை பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான குறித்த மாணவர்களை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முறிகண்டியில் விபத்து இருவர் படுகாயம்



முல்லைத்தீவு முறிகண்டி, செல்வபுரம் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் குறித்த விபத்து ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து தென் பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிற்றூர்தி வாகனமும், அதேதிசையில் பயணித்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருமே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்திய சாரதி, வாகனத்தினை இடது புறமாக முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வருகின்றது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விசேட நிகழ்வு ஒன்றுக்கு, பால், கற்கண்டு உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் சென்றவேளை குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்தில் முறிகண்டி செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த இருவரே காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

## உள்ளூராட்சி அமைச்சின் அனுமதி இல்லை நெல்சிப் திட்டங்கள் ஸ்தம்பிதம்

பூநகரி தெளிகரை வீதி மற்றும் பச்சிலைப்பள்ளி இயக்கச்சி சந்தை தொகுதி ஆகியவற்றுக்கு அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் நிதி பங்களிப்புடன் நெல்சிப் திட்டத்தின் மூலம் மேற்கொள்ள இருந்த திட்டங்கள் இதுவரை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அனுமதி கிடைக்காமையினால் மேற்படி திட்டங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாக உரிய பிரதேச சபைகளின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் இராசலிங்கம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்ளூராட்சி மக்கள் பங்களிப்பு அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மேற்படி அபிவிருத்திப் பணிகள் அனுமதி தாமதத்தால் இதுவரை மேற்கொள்ளமுடியாத நிலைமையால் பிரதேச மக்களின் அழுத்தங்களுக்கு பதில் சொல்ல முடியாத நிலையில் தாம் இருப்பதாக பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் இந்த அனுமதி தாமதத்தால் இவ்விரு முக்கியமான செயற்றிட்டங்களும் செயற்படுத்த முடியாமல் போகும் நிலை ஏற்படலாம் எனவும் அவர்கள் சந்தேகம் தெரிவித்தனர். (29)

## நூலக கட்டடம் திறந்து வைப்பு

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் சங்கானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நூலக கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, கலந்துகொண்டார்.

விருந்தினர்கள் சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் மாவை சேனாதிராசா சரஸ்வதியின் உருவச்சிலையை திரைநீக்கம் செய்ததுடன் 5.2 மில்லியன் ரூபா சபை நிதியில் கட்டப்பட்ட கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

மேலும் இந்த நிகழ்விற்கு கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், சித்தார்த்தன், அனோல்ட், விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (63)

# ஆயுர்வேதம்



## மயக்கத்தை நீக்கும் வேப்பெண்ணெய்!

வேப்பெண்ணெய் மருத்துவத்தில் பலவிதத்தில் நிறைய உபயோகிக்கப்படுகிறது. இந்த எண்ணெய்யில் இருக்கும் கடுமையான வாசனையை அனுசரித்து சூடான வீரியம் கொண்டதென்று சாமானியமாய் தோன்றலாம். ஆனால், இது அத்தனை கடுமையான உஷ்ண வீரியம் கொண்டதல்ல.

ஏனென்றால், தலைக்கும் உடலுக்கும் வேப்பெண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகு அதன் வாசனை பல மணிநேரம் மூக்கைத் துளைக்குமே தவிர எண்ணெய் தேய்த்துக் கொண்டவருக்கு கண் பொங்கி உடல் எரிச்சல் உஷ்ணம் உண்டாவதில்லை. அதனால் கடுகெண்ணெய் அளவிற்கு வேப்பெண்ணெய் சூட்டை ஏற்படுத்துவதில்லை.

**வேப்பெண்ணெய்யின் மருத்துவ குணங்கள்:**

வெளிப்புறத் தேய்ப்பினாலும் உள்ளுக்குச் சாப்பிடுவதினாலும் கிருமிகள், குஷ்டநோய்கள், வாயு பித்தம் கபம் எனும் மூன்று தோஷங்களையும் போக்கும்.

சிறுநீர்ப்பையில் ஏற்படும் கல் அடைப்புகளை வெளிப்படுத்தும்.

கல்லீரலில் உண்டாகும் பித்தக் கல் அடைப்பையும் வெளிப்படுத்தலாம்.

குடலில் ஏற்படும் கிருமிகள், தலைமுடியில் வரும் பேன், ஈறுப் பூச்சிகள், வெட்டுக்காயம், நாட்பட்ட அழுகிய புண்கள். புண்களில் வரும் புழுக்கள் இவற்றை அடியுடன் அகற்றும்.

வேப்பெண்ணெய்யை உள்ளுக்குச் சாப்பிடுவதால் கள், சாராயம மற்ற போதைவஸ்துக்கள், தூக்கமாத்திரைகள் இவைகளினால் ஏற்பட்ட மயக்கம், பயத்தினால் ஏற்பட்ட மயக்கம், அபதந்த்ரகம் எனும் சங்கை கோளாறு முதலியவற்றை நீக்கித் தெளிவை உண்டாக்கும்.

முட்டி மற்றும் இதர மூட்டுகளில் வாயு மற்றும் கபத்தினால் ஏற்படும் நீர் திரவக்கோர்வை, வீக்கம், வேதனைகளை வேப்பெண்ணெய்யின் ஒத்தடம் சீக்கிரமே குணமடையச் செய்யும்.

நாட்பட்ட தலைவலி, மண்டையிடி பாரம் எல்லாம் சில நாட்கள் தலையில் வேப்பெண்ணெய்யைத் தேய்ப்பதால் குணமாகும்.

காய்ச்சலுக்கும், காய்ச்சலில்லாமலும் கப வாயுவினால் மார்பில் சளி அதிகம் உறைந்து மூச்சுத் திணறலும் உள்ள கஷ்ட நிலையில் மார்பைச் சுற்றிலும் சுட வைத்த வேப்பெண்ணெய்யைத் தடவி வறுத்த கொள்ளினால் ஒத்தடமிட உடனே கபம் இளகி உபாதை குறையும்.

ஏழு வயது நிரம்பிய குழந்தைகளுக்கு அஜீரணத்தினால், கபவாத காய்ச்சல் வேகத்தினால், வயிற்றில் நாக்குப் பூச்சியினால், மலச்சிக்கலினால், விஷவாயுவினால், திடீர் குளிர காற்றுக்கு இலக்காவதால் மற்றும் ஏதாவது காரணத்தினால் திடீரென்று உண்டாகக் கூடிய உடலுதறல், வலிப்பு, இழுப்பு, மூச்சுத் திணறல் தொந்தரவுகளில் வேப்பெண்ணய் மிகவும் உபகாரமானது. உள்ளுக்குச் சாப்பிடக் கொஞ்சம் கொடுத்தல், மேலுக்குப் பூசி ஒத்தடம், ஆசனவாயில் எனிமா செய்தல் போன்றவற்றால் உடனடி பலனைத் தரும்.


மேற்குறிப்பிட்ட காரணங்களால் நல்லெண்ணெய்யை விட வேப்பெண்ணெய்யின் சூடான வீரியமானது வலிப்பு நோயை ஏற்படுத்தும் மூளையைச் சார்ந்த காரணிகளை விரைவாக அகற்றக்கூடிய தன்மை உடையதாகக் கருதலாம்.

வலிப்பு நோயில் உடல் மற்றும் மனதைச் சார்ந்த வாத பித்த கபம் மற்றும் ராஜசிக தாமஸிக தோஷங்களால் சூழப்பட்ட புத்தி, மனம், இதயம் இவற்றை இணைக்கக் கூடிய குழாயகளை, நன்றாக ஊடுருவிச் சென்று அவற்றை வெளிப்படுத்தும் வாந்தி எனும் சிகிச்சை முறையால் அக்குழாய்களை சுத்தம் செய்யவேண்டும்.

வாயுவின் சீற்றத்தால் ஏற்படும் வலிப்புநோயை வஸ்தி எனும் எனிமா சிகிச்சைமுறை பித்தத்தால் உண்டான வலிப்பை விரே சனம் எனும் பேதிமருந்து கொடுத்து செய்விக்கப்படும் சிகிச்சை, கபத்தால் உண்டான வலிப்பை வாந்தி சிகிச்சையை பிரயோகம் செய்தும் குணப்படுத்த வேண்டும்.

அதன்பிறகு உடலை வலுவூட்டும் கஞ்சிகளைக் கொடுத்து பஞ்சகவ்யக்ருதம் எனும் நெய்மருந்தை உள்ளுக்குச் சாப்பிட வேண்டும். மூளை மற்றும் இதயத்திலுள்ள குழாய்களை வலுவூட்டும் இந்த நெய்மருந்தால் வலிப்பு நோய் நன்றாக மட்டுப்படும்.

## கடற்புலிகளின் கலங்களை ஆச்சரியத்துடன் பார்வையிட்ட இந்திய கடலோர படையினர்



அண்மையில் திருகோணமலைத் துறைமுகத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய கடலோரக் காவற்படையினர், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் பயன்படுத்தப்பட்ட கடற்கலங்களை ஆச்சரியத்துடன் பார்வையிட்டுள்ளனர்.

இந்தியக் கடலோரக் காவற்படையின் ரோந்துக் கப்பலான வைபவ், கடந்த மாதம் 28 ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொண்டிந்தது.

வைபவ் கப்பல் திருகோணமலையில், தரித்து நின்ற போது, இந்திய கடலோரக் காவல்படையினர், பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்றனர்.

இதன்போது, கடற்புலிகளிடம் இருந்து இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கடற்கலங்களைப் பார்வையிட்ட இந்தியக் கடலோரக் காவல்படையினர். ஆச்சரியமடைந்தனர்.

கடற்புலிகள் உருவாக்கிய கடற்கலங்கள் தொடர்பாக இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர், இந்தியக் கடலோரக் காவற்படையினருக்கு விளக்கிக் கூறியிருந்தார்.

இந்தியக் கடலோரக் காவல் படைக் கப்பலான வைபவ் கடந்த 2ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

# மன்னார் கடற்பிரதேசத்தில் வருட இறுதிக்குள் மசகு எண்ணெய்

## அமைச்சர் பாலித ரங்கே பண்டார நம்பிக்கை

(கொழும்பு)

**இவ்வருட இறுதிக்குள் மன்னார் பிரதேசத்தின் கடற்பரப்பிலிருந்து மசகு எண்ணெய் பெறப்பட்டு எமது எரிபொருள் தேவையினை எம்மாலேயே நிறைவேற்றிக் கொள்ள முடியுமாக இருக்கும்.**



எனினும் குறிப்பிட்ட காலத்துக்கே இவ் எரிபொருள் போதுமானதாக உள்ளது என மின்சக்தி எரிபொருள் துறை இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

வணாத்தவில்லு பிரதேசத்தில் இடம்பெற்ற புதிய மின்சார இணைப்புத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்

கடந்த அரசாங்க காலத்தில் மன்னார் பிரதேசத்தில் மசகு எண்ணெய் ஆராய்ச்சிக்கான முயற்சிகள் போதுமானளவில் மேற்கொள்ளப்படவில்லை.

நாம் தற்போது உலகளவிலான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி நாட்டுக்கு பாதிப்பேற்படாத வகையில் ஒப்பந்தங்களினை செய்து இவ் வருடத்திற்குள் நமது நாட்டிலிருந்து மசகு எண்ணெய் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

இதன் மூலம் நமது எரிபொருள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். இதற்காக தற்போது சீனா மற்றும் கொரியா உள்ளிட்ட சில நாடுகளினது கம்பனிகளிடம் பேச்சுவார்த்தை இடம்பெறுகிறது.

எமது அரசாங்கம் முன்னெடுத்துள்ள 100 நாள் துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது வடமேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நடவடிக்கை அடுத்த சில நாட்களில் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எமது புதிய அரசின் நூறு நாள் வேலைத்திட்டம் நிறைவடையும் போது நாட்டில் மின்சாரத் தேவை முற்று முழுதாக நிறைவு செய்யப்படும். நாம் அரசாங்கத்தைப் பொறுப்பெடுத்து மிகக் குறுகிய காலப் பகுதியினுள் பல்வேறு மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய பணிகளைச் செய்திருக்கின்றோம் என்றார்.

## குமார் குணரத்னத்தை கைது செய்ய உத்தரவு



முன்னிலை சோஷலிச கட்சியின் மத்திய குழு உறுப்பினர் குமார் குணரத்னத்தை கைது செய்யுமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளது.

குமார் குணரத்னம் இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருப்பதால் அவரைக்கைது செய்து ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவில் இருந்து சுற்றுலா விசாவில் இலங்கை வந்துள்ள குமார் குணரத்னத்திற்கு இலங்கையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட சட்ட அனுமதி கிடையாது என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அறிவிக்கவென குமார் குணரத்னம் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட போதும் அவர் வரவில்லை என குடிவரவு கட்டுப்பாட்டாளர் கூறினார்.

## தண்டவாளம் ஏற்றிவந்த லொறி மதவாச்சியில் விபத்துக்குள்ளானது

### நால்வர் பலி 13 பேர் காயம்



மதவாச்சியில் இடம்பெற்ற லொறி விபத்தில் ரயில்வே திணைக்களத்தின் ஊழியர்கள் நால்வர் பலியாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு ரயில் தண்டவாளங்களை ஏற்றிக்கொண்டு சென்றபோதே இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தண்டவாளங்களுக்குள் நசுங்குண்ட நிலையிலேயே அந்த நால்வரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




சம்பவத்தில் காயமடைந்த மேலும் 13 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கெண்டு வருவதாகவும் தெரிவித்தனர்

## புதிய அரசின் செயற்பாடு திருப்தி கொள்ளாத ரஞ்சன்



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என சமூக சேவைகள் மற்றும் கால்நடை வள பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துடன் திருடர்களுடன் நிர்வாணமாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின போது தொண்டையில் இரத்தம் கசிய உரக்க குரல் கொடுத்து செய்யப்பட்ட பிரச்சாரங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

திருடர்கள், மோசடிகாரர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வதாகவும், ஊழல் மோசடிகாரர்களை தப்பிச் செல்ல விடாது விமான நிலையத்தை அடைத்து விடுவதாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த வாக்குறுதிகள் எதுவும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக குரல் கொடுத்த சிலர் பதவிகள் கிடைத்தவுடன் அமைதி பேணி வருகின்ற போதி லும் தாம் அவ்வாறு செய்யப் போவதில்லை எனவும், மக்களின் தேவைகளுக்காக குரல் கொடுக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரிட்டன் சென்ற மங்கள ஹகோஸ்வைரை சந்தித்தார்




(கொழும்பு)

பிரித்தானியா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, அந்நாட்டின் வெளியுறவுத்துறை அலுவலக அமைச்சர் "ஹகோ ஸ்வைரை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது தாம் இலங்கையின் வெளியுறவு அமைச்சருடன் சிறந்த சந்திப்பு ஒன்றை மேற்கொண்டதாக ஸ்வைர் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த மாதம் இலங்கை வந்திருந்த ஸ்வைர், ஜனாதிபதி பிரதமர், வடக்கு ஆளுநர் உட்பட்ட வகையில் அனைத்து தரப்பினரையும் சந்தித்திருந்தார்.

இதன்பின்னர் நாடு திரும்பும்போது இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஸ்வைர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை தற்போது லண்டன் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் அங்கிருந்து அமரிக்கா சென்று ராஜாங்க செயலாளர் ஜோன் கெரியை சந்திக்கவுள்ளார்.


## வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்றவர் கைது



(கொழும்பு)

வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்றதாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை கைதுசெய்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார். 7, 717634 ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை கொண்ட 10 கட்டுக்கள் பையொன்றினுள் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

36. நிழற்றிய இடத்துக்கு பொருத்தமான பிராணி எது?
1) தவளை
2) மீன்
3) கொக்கு




37. முகம்பார்க்கும் கண்ணாடியைப் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியக்கூடிய எழுத்துக்கள் அடங்கிய அட்டையைத் தெரிவு செய்க

1. MPK 2. ATA 3. VSV

38. காலம் பொன்னானது என்றால்
1) காலம் முக்கியமானது என்பதாகும்
2) காலம் பொன்னாக மாறியுள்ளது என்பதாகும்
3) காலம் விலை கூடியது என்பதாகும்

39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பந்தியின் உதவியுடன் விடை தருக

சின்னச்சின்ன மழைத்துளிகளில் நனைய எனக்கு மிகவும் விருப்பம். அத்துளிகளில் நனைந்தபடி பறந்து செல்லும் போது மழைத்துளி பட்டுச்சிரிக்கும் மரங்களையும் கண்டு இரசிப்பேன். எங்களைப்போல குழந்தைகளும் மழையில் ஆனந்தத்தோடு நனைந்து மகிழ்வதையும் நான் கண்டு அனுபவிப்பேன்

39. இத்தகைய எண்ணம் தோன்றுவது
1) குழந்தைகளிடம் 2) முதியவர்களிடம் 3) பறவைகளிடம்

40. பந்தியில் உள்ள அடுக்குமொழிச் சொல் எது?
1) சின்னச்சின்ன 2) மழைத்துளி 3) பட்டுச்சிரிக்கும்

பின்வரும் பாடலை வாசித்து 41ஆம், 42ஆம் வினாக்களுக்கு விடை தருக

மலையில் வந்து முகில்கள் கூட
◎ மயிலும் ஆடுது
அழகுத்தோகை ☼ நின்றே
ஆனந்தமாய் ஆடுது

41. ◎ என்ற குறியீடு உள்ள இடத்துக்கு வரவேண்டிய சொல்லை தெரிவு செய்க
1) அழகு 2) பெரிய 3) வண்ண

42. ☼ என்ற குறியீடு உள்ள இடத்துக்கு வரவேண்டிய சொல்லை தெரிவு செய்க
1) விரித்து 2) மடித்து 3) உயர்த்தி

43. கடலில் தினமும் இருப்பவை
1) கப்பல், உப்பு 2) மீன்கள், நீர் 3) அலை, மீனவர்

44. அடர்ந்த காடு ஒன்றில் எப்பொழுதும் இருப்பவை
1) மரங்கள், மிருகங்கள் 2) வீதிகள், மின்கம்பங்கள் 3) கற்கள், வாகனங்கள்

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(1).256cm (2).45 (3).வடக்கு (4).3 (5).9.25 (6).2000 (7).இருபத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு (8).5 (9).25 (10).3/8 (11).48 (12).(i) செங்கோணம் (ii) விரிகோணம் (13).(i).145 (ii).130 (14).3/8 (15).20cm (16).50cm² (17).7/10 (18).8மணி (19).(i).15 (ii).55வரை (20).1500 (21).20m (22).3பெட்டி (23).ரூபா 9.50சதம் (24).105 (25).6850ml (26).22 : 05 (27).30 (28).ரூ.52.50 சதம் (29).4m 700cm (30).8 (31).5/8 (32).550ml (33).19 (34).8/12, 12/18 (35).25 (36).90m (37).30km (38).84 (39).2/8 (40).1125ml (41).120 (42).40/= (43).1725/= (44).3 (45).ரூபா 26.25 சதம் (46).8cm (47).20செக்கன் (48).11.30 (49).40 நிமிடம் (50).331/755

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015




பகுதி - I
1 மணி 15 நிமி




# கல்வி முரசு







1 தொடக்கம் 44 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையை எழுதுக

01ஆம், 2ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க

01.

(1)

(2)

(3)

02.

(1)

(2)

(3)

பின்வரும் உருவில் வெற்றிடத்துக்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க




03.

1. 
2. 
3. 

04. ஒற்றுமையை வலியுறுத்தும் உவமையைத் தெரிவு செய்க
1) நகமும்சதையும் போல 2) குடத்துள்விளக்கு போல 3) இலவுகாத்த கிளிபோல


05. பயத்தினை வெளிப்படுத்தும் தொடரைத் தெரிக
1) சிங்கம் போல் கர்ச்சிக்கிறான் 2) புலிபோல் ஓடுகின்றான் 3) மான்போல் நடுங்குகிறான்

06. 

இவ்வுருவில் வட்டத்திற்கும் செவ்வகத்திற்கும் பொதுவான ஆங்கில எழுத்து எது?
1) L 2) T 3) B

07. மூன்றுக்கு பத்து நிமிடம் என்பதைக் காட்டும் கடிகார முகத்தைத் தெரிவு செய்க
1. 
2. 
3. 

08. மூன்று ஆண்டுகளுக்கு முன் கண்ணனின் வயது 8 ஆகும். இன்னும் இருவருடங்களின் பின் கண்ணனின் வயது யாது?
1) 11 வருடங்கள் 2) 13 வருடங்கள் 3) 10 வருடங்கள்

09.  தரப்பட்ட வெட்டுருவை மடித்து ஒட்டினால் கிடைக்கும் திண்மவடிவம் எது?
1) சதுரமுகி 2) கனவுரு 3) நான்முகி

10. எழுத்துப்பிழையற்ற வாக்கியத்தை தெரிந்து கோடிடுக
1) அவரது புகழ் உலகெங்கும் பரவியது
2) நாம் எவரையும் அலக்கழித்தல் கூடாது
3) அறிவ வலர்ச்சிக்கு கல்வி இன்றியமையாதது

11ஆம், 12ஆம் வினாக்களில் உள்ள சோடிச்சொற்களில் பொருத்தமில்லாத சோடியைத் தெரிவு செய்து கோடிடுக

11. 1. புத்தளம் - மாகாணம்
2. மாத்தளை - மாவட்டம்
3. சென்னை - நகரம்


12. 1. கரப்பந்து - 6பேர்
2. காற்பந்து - 11பேர்
3. எல்லே - 5பேர்

| 2011 April | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Mo | Tu | Wen | Th | Fri | Sa | Su |
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நாட்காட்டி தரப்பட்டுள்ளது.

13. 14ஆம் திகதி எப்பண்டிகைக்குரிய விடுமுறை தினமாகும்.
1) நத்தார் 2) தீபாவளி 3) புத்தாண்டு

14. மேமாதம் 06ஆம் திகதி என்ன கிழமை
1) வியாழன் 2) வெள்ளி 3) சனி



15. 
இவ்வுருவில் இதுபோன்று இன்னும் எத்தனை வட்டங்கள் வரையமுடியும்?
1) 30 2) 18 3) 20

16. ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை
1) எழுத்துக்களும், கருத்தும் 2) கருத்தும், அச்சுப்பிழையும் 3) இகரக்குறியும், உகரக்குறியும்


17. சமுத்திரம் ஒன்றில் எப்போதும் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க
1) நீர் - அலை - மீன் 2) கப்பல் - அலை - உப்புச்சுவை 3) மீன் - மீனவர் - கரை

18. குயில் கூவியது என்பது பொருத்தமானதாயின் குழந்தை அழுதான் என்பது
1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

19. நேற்று வானில் கருமுகில் காணப்பட்டதால் மழை பெய்தது. இன்றும் கருமுகில் காணப்படுகிறது. எனவே இன்றும் மழை
1) பெய்யும் 2) பெய்யாது 3) கூறமுடியாது

20.  தரப்பட்ட உருவில் உள்ள வட்டங்களின் மையங்களை இணைப்பதன் மூலம் பெறக்கூடிய உரு எது?


21.  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 4 2) 6 3) 3

22.  தரப்பட்ட கூட்டல் செய்கையால் ஆகிய உருக்களுக்குரிய பெறுமானங்கள் முறையே
1) 1, 4 2) 2, 3 3) 2, 5



23ஆம், 24ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட சொல்லுக்கு பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்க

23. தேனீ 1) புற்று 2) மகரந்தசேர்க்கை 3) சேமிப்பு

24. சந்தை 1) நுகர்வோர் 2) வியாபாரி 3) வழக்கறிஞர்

மாதாந்த பரீட்சை ஒன்றில் மாணவன் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன

| மாதம் | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 52 | 55 | 58 | .......... | 64 |

25. மாணவன் சித்திரை மாதத்தில் பெற்ற புள்ளிகள் எத்தனையாக இருக்கலாம்?
1) 61 புள்ளிகள் 2) 68 புள்ளிகள் 3) 62 புள்ளிகள்

26. மாணவன் 70 புள்ளிகளைப் பெற்ற மாதம் எது?
1) ஆனிமாதம் 2) ஆவணிமாதம் 3) ஆடிமாதம்

27. பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி ஒன்றில் சிவப்பு, மஞ்சள், பச்சை நிறக்கொடிகள் மாறி மாறிகட்டப்பட்டிருந்தன. வரிசையில் முதலாவது கொடியின் நிறம் சிவப்பு எனின் 28ஆவது கொடியின் நிறம் என்ன?
1) சிவப்பு 2) மஞ்சள் 3) பச்சை

28. நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு பிரதான மண்டபத்தில் பெற்றோர் கூட்டம் நடைபெறும் இது ஒரு
1) அறிவித்தல் 2) அறிவுறுத்தல் 3) அறிவுரை

29. கொலாஜ் அலங்காரம் செய்யத்தேவையான பொருட்கள் கொண்ட கூட்டம்
1) வித்துக்கள், பசை, வர்ணம்
2) மெழுகு, தூரிகை, வர்ணம்
3) வர்ணக்கடதாசி, பசை, கத்தரிக்கோல்

30. சொன்னதைச் சொல்லும் பறவை - நான்
சொண்டால் பழத்தைக் கடித்திடுவேன்
நான் யார்? நான் யார்?
பாடலில் கூறப்படும் பிராணி எது?
1) கொக்கு 2) கிளி 3) குயில்


கீழேயுள்ள கணிதச்செய்கைகளின் அடைப்புக்களில் உள்ள பெறுமதிக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய அடைப்பைத் தெரிவு செய்க

31. 9 + [5 + 3] = 17 1. [6 + 4] 2. [12 - 4] 3. [3 × 2]

32. [16 - 9] + 5 = 12 1. [14 ÷ 2] 2. [4 + 4] 3. [9 - 3]

33. சதுரம் ஒன்றின் சுற்றளவு 16cm எனின் சதுரத்தின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?
1) 12cm² 2) 8cm² 3) 10cm²

34.  அருகில் காட்டப்படுவது
1. கேலிச்சித்திரம்
2. கிறுக்கல் சித்திரம்
3. ஒட்டுச்சித்திரம்

35. கடுகதி என்னும் சொல்லைக்குறிக்கும் இரகசியகுறியீட்டைத் தெரிவு செய்க


# திருமறைக் கலாமன்றத்தின் தைத்திங்கள் பொற்தூறல்





(யாழ்ப்பாணம்)

50 ஆவது ஆண்டில் காலடி பதித்துள்ள திருமறைக் கலா மன்றம் இவ்வாண்டில் முன்னெடுக்கவுள்ள நிகழ்சிகளில் ஓர் அங்கமாக மாதாந்தோறும் 'பொற்தூறல்' என்னும் நிகழ்வினை நடாத்தி வருகின்றது. இதன் முதலாவது மாதத்துக்கான நிகழ்ச்சி தைத்திங்கள் பொற்தூறல எனனும் பெயரில் கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது.

யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஓய்வு நிலைப் பேராசிரியர் கலாநிதி . எஸ். சிவலிங்கராஜா கலந்து சிறப்பித்தார். நிகழ்ச்சிகளாக சிவானந்தன் அகிலனின் இசைக்கச்சேரியும், கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியை திருமதி. அகல்யா ராஜபாரதியின் மாணவிகளின் நடனங்களும் இடம்பெற்றன .

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த கர்நாடக இசைப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்து தற்போது அவுஸ்ரேலியாவில் மெல்பேர்ன் நகரில் பொறியியலாளராக பணியாற்றி வரும் அகிலன் புலம்பெயர் நாடுகள் பலவற்றில் பரத நாட்டிய அரங்கேற்றங்களுக்கும், மிருதங்க அரங்கேற்றங்களுக்கும் பாடிவரும் ஒரு இளங் கலைஞர். குறிப்பாக பேராசிரியர் சி.வி. சந்திரசேகர், டாக்டர் வசுந்தரா துரைசாமி, நாட்டியப் பேராசான் மதுரை ஆர். முரளிதரன் போன்ற பெருங்கலைஞர்களின் நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு பாடிய பெருமை பெற்றவர்.

தற்போது அவுஸ்ரேலியாவில் 'கீதாஞ்சலி' என்னும் இசை நிறுவனத்தை நிறுவி இசைப் பணியாற்றி வரும் இவர் இசைத்துறையில் பல்வேறு பட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த இசைக்கச்சேரிக்கு மிருதங்கத்தை நல்லை. க. கண்ணதாசும் வயலின் இசையினை அம்பலவாணர் ஜெயராமனும், முகர்சிங் இசையினை ந. சதீஸ்குமாரும் கடம் இசையினை இரா. சிவராமனும் வழங்கினார்கள்.

பார்வையாளர்களை மிகவும் கவர்ந்த இந்த இசைக்கச்சேரியைத் தொடர்ந்து கலைஞர் சிவானந்தர் அகிலன் திருமறைக் கலாமன்றதால் கௌரவிக்கப்பட்டார்.

இதன் போது யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் பொன்னாடை போர்க்க , பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி எஸ். சிவலிங்கராஜா மாலை அணிவித்தார்.

இசைக் கச்சேரியினைத் தொடர்ந்து திருமறைக் கலா மன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவிகள் வழங்கும் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# குழந்தைகளுக்கான மழலைச் செல்வம்



## நூல் விமர்சனம்

சிவநெறிக் கலாநிதி "கலா பூஷணம்' இராசையா ஸ்ரீதரன் இந்நூலை எழுதியுள்ளார்.

பாலர் வகுப்பு முதல் முதலாம் தரம் வரையான மாணவர்களுக்கு பயன்படும்படியாக இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

மனித வாழ்வின் அத்திவாரமாக விளங்கும் பாலர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாலர்கள் விரும்பிக் கற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும்

பாலர் வகுப்பு நூல்களில் காணப்படுகின்ற விடயங்களுக்கு மேலதிகமாக சில விடயங்களை உள்ளடக்கியதாகவும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது

நவீன உலகின் தேவையை உணர்ந்து அவ்வுலகிற்கு மாணவர்களை தயார்படுத்துவது அவசியமாகின்றது.

அந்த வகையில் அரிவரி வகுப்புக்கான பாடப் பயிற்சிகளும் பாட்டுகளும் அடங்கியதாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிறிண்டேர்ஸ் அச்சகத்தினரால் அழகான முறையில் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்ற இந்நூல், பாலர் வகுப்பிலேயே மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள் தேவையாக உள்ளன என்கின்ற அடிப்படையில் மாறிவரும் உலகின் கோட்பாடுகளைத் தாங்கியதாகவும் வெளிவந்துள்ளது.

எழுதுதல், வாசித்தல், உரத்து வாசித்தல், பாடுதல் என்கின்ற அடிப்படை விடயங்களை இந்நூல் மூலமாக மாணவர்களுக்கு உருவாக்க முடியும் என்கின்ற நோக்கோடு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய நூல்களை பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து பயனடையச் செய்வதன் மூலம் நூல் ஆசிரியரின் நோக்கங்களையும் முயற்சிகளையும் நிறைவேற்ற முடியும்.

(பூஞ்சிட்டு)

# ஈரானின் கப்பல் தொடரணி கொழும்பு துறைமுகத்தில்



சர்வதேச கடற்பரப்பில் தமது பிரசன்னத்தை விஸ்தரிக்கும் நோக்கில் ஈரானின் 33ஆவது கடற்படை கப்பல் தொடரணி கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

இந்த தொடரணியில், பண்டார் அப்பாஸ் என்ற உதவு கப்பலும் நக்டி என்ற நாசகாரி கப்பலும் உள்ளடங்குகின்றன.

இந்த கப்பல்கள் தொடரணி சுமார் 5000 கிலோமீற்றர் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளன. இந்த தொடரணியில் 120 இராணுவ மற்றும் இராணுவமற்ற பிரிவுகள் உள்ளன.

அத்துடன், பல நவீன தொழில்நுட்ப வசதிகளும் உள்ளன.

ஈரானின் கடற்பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக ஈரான் அண்மைக் காலங்களில் சர்வதேச கடல் பிரசன்னத்தை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## அதிக விலையில் பொருட்கள் விற்பனை வர்த்தகர்களுக்கு வழக்கு

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளுக்கு மேலதிகமான விலைகளில் பொருட்களை விற்பனை செய்த 200 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஸூக் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது இவ்வாறு விலைக் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்ட வியாபாரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்றிடம் அவர் கூறியுள்ளார்.

# நீலப்படையணியின் ரீசேர்ட்டுகள் மீட்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல் வரும், நாடாளுமன்ற உறுப்பின ருமான நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான நீலப்படைய ணியின் சுமார் 150,000 ரீசேர்ட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவை சபையின் இலச்சினையுடன் நீலப் படையணியின் பெயரும் இந்த ரீசேர்ட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் குடும்பத் தாரது படங்கள் பொறிக்கப்பட்ட இந்த ஆண்டுக்கான பெருந் தொகை நாட்காட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் சபையின் தலைமைக் காரியாலய களஞ்சியசாலையில் இந்த பொருட்கள் மீட்கப்பட்டன.

இளைஞர் விவகார அமைச்சர் நிரோசன் பெரேரா மற்றும் இளைஞர் சேவை சபையின் தலைவர் எரந்தக வெலியங்ககே உள்ளிட்ட அதிகாரிகள் களஞ்சியசாலையைச் சோதனையிட்டுள்ளனர்

# ஊழலுக்கான முதன்மை சூத்திரதாரி முன்னாள் ஜனாதிபதி மகிந்தவே

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்ற பெருமளவிலான ஊழல் மோசடிகளின் முதன்மைச் சூத்திரதாரி வேறு யாருமல்ல. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலஞ்ச ஊழல் ஒழிப்புக்கான அமைப்பின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

நான் கடந்த ஏழு வருடங்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவன் என்ற வகையில் என்னால் இதனைத் தெளிவாகக் கூறமுடியும்.

தற்பொழுது, நாட்டை விட்டு வெளியேறிய பஷில் ராஜபக்ஷ தான் கடந்த அரசாங்கத்தின் எல்லா ஊழல்களுக்கும் காரணம் எனவும் மகிந்த ராஜபக்ஷவை சுத்தவாளி எனவும் பேச ஆரம்பித்துள்ளனர்.

நாட்டை விட்டு வெளியேறியவரின் மேல் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் போட்டு விட்டு நாட்டில் உள்ளவரை சுத்தமாக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இலஞ்ச ஊழல் முறைப்பாடுகளை விசாரிக்க இந்த நாட்டில் உள்ள சாதாரண சட்டங்கள் போதாமல் உள்ளன. விசேட சட்டங்கள் கொண்டுவரப்படல் வேண்டும்.

கடந்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்கவும் லஞ்ச ஊழலை ஒழிப்பதாகக் கூறியே ஆட்சிக்கு வந்தார். அவரும் ஜனாதிபதியானவுடன் லஞ்ச ஊழல் முறைப்பாடுகளை முன்வைத்தார்.

இருப்பினும் அவரினால் பாடசாலை அதிபர் ஒருவரையே அவரது ஆட்சிக் காலத்தில் லஞ்ச ஊழல் தொடர்பில் கைது செய்ய முடிந்தது. இதுபோன்ற நிலைமை இந்த அரசாங்கத்துக்கும் வந்துவிடக் கூடாது எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.


# வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

........................................

பெற்றோர் கையொப்பம்

# அறுதிப் பெரும்பான்மையுடன் டில்லியில் ஆம்ஆத்மி ஆட்சியமைப்பு

## மண்கவ்வின பா.ஜ.க., காங்கிரஸ்



டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வரலாறு காணாத வெற்றியை ஆம்ஆத்மி கட்சி வெற்றி பெற்றுள்ளதுடன், பா.ஜ.க. காங்கிரஸ் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகளின்படி ஆம்ஆத்மி67, பா.ஜ.க.3, காங்கிரஸ் 0 என்ற வெற்றி நிலை உறுதியானது.

மேலும் இத்தேர்தலில் பா.ஜ.க.வின். முதல் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட கிரண் பேடி தோல்வியை தழுவியுள்ளதுடன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஆம் ஆத்மி வேட்பாளரான வழக்கறிஞர் எஸ்.கே. பக்காவிடம் 2277 வாக்குகள் வித்தியாசத்தில் கிரண் பேடி தோல்வி யடைந்தார்.

பக்காவுக்கு ஆதரவாக 65919 வாக்குகளும், கிரண் பேடிக்கு ஆதரவாக 63642 வாக்குகளும் கிடைத்துள்ளன. காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான பன்சிலாலுக்கு 6189 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் பா.ஜ.க. இந்த தடவை 27 இடங்களை பறி கொடுத்துள்ளது. கடந்த தேர்தலில் 8 இடங்களில் வெற்றி பெற்றிருந்த காங்கிரஸ் கட்சிக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. 15 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்த காங்கிரசுக்கு டில்லி வாக்காளர்கள் ஏமாற்றத்தையே அளித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி டில்லியில் ஆட்சி அமைக்க மொத்தம் உள்ள 70 இடங்களில் 36 இடங்கள் வேண்டும். ஆனால் ஆம் ஆத்மிக்கு 67 இடங்கள் கிடைத்துள்ளது. இதன் மூலம் பா.ஜ.க.வும், காங்கிரசையும் விரட்டி விட்டு, ஆம்ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆட்சியைப் பிடித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் டில்லி மாநில மக்கள் ஆம்ஆத் மிக்கு 28 இடங்களில்தான் வெற்றியை கொடுத்திருந்தனர். ஆனால் இந்த தடவை டில்லி மக்கள் கடந்த தடவையை விட கூடுதலாக 38 இடங்களை கெஜ்ரிவாலுக்கு அள்ளி கொடுத்துள்ளனர். இதன் மூலம் யார் தயவும் இல்லாமல் அரவிந்த் ஜெக்ரிவால் டெல்லியில் தான் ஆட்சியை அமைக்க உள்ளார்.


# 30 பேருந்து பயணிகளை கடத்தியது போகோஹரம்

நைஜீரிய எல்லைப் பகுதியான கமரூனில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 30 பேருந்து பயணிகள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களை போகோஹரம் பயங்கரவாதிகள் கடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஜின்ஹுவா இராணுவம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கடத்தப்பட்ட பேருந்து பயணிகள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்பது இதுவரை தெரியவரவில்லை. தீவிர தேடுதல் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்து மட்டும் எல்லைப் பகுதியில் சாலையோரம் கேட்பாரற்று கிடந்த நிலையில் மீட்கப்பட்டது. கடத்தப்பட்டவர்கள் நைஜீரியாவுக்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

## அமெரிக்கா வான்வழித் தாக்குதல் ஐ.எஸ்.ஐ.எஸ். துணைத் தலைவர் பலி



ஆப்கானிஸ்தானில் நடந்த வான்வழி தாக்குதலில் ஐ.எஸ் அமைப்பின் துணைத் தலைவர் பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மண் (Helmand) மாகாணத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் துணைத் தலைவர் முல்லா அப்துல் ராப்த் (Mullah Abdul Rauf) பதுங்கியிருந்தார். ஐ.எஸ் அமைப்புக்கு துணை தலைவராய் இருக்கும் இவருக்கு கோராசன் (Khorasan) என மற்றொரு பெயரும் உண்டு. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்காக ஆட்சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வந்த இவரும் இவரது மைத்துனரும் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய வான்வழி தாக்குதலில் இறந்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், பயங்கரவாதிகளுடன் இவர் உட்பட 6 பேர் கார் ஒன்றில் சென்றனர். ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் அனைவரும் பலியாகியுள்ளனர் என கூறியுள்ளனர்.

எனினும் இவரது மரணத்தை நேட்டோ படைகள் இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 53 ஆண்டுகளுக்கு முன்பு மாயமான சிலி நாட்டு விமானம் கண்டெடுப்பு



சிலி நாட்டில் 53 ஆண்டுகளுக்கு முன்பு காணாமற்போன விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 34 பயணிகளுடன் ஓசார்னோவில் இருந்து சான்டியாகோவுக்கு சென்ற இந்த விமானம் 1961ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி காணாமற் போனது. இந்த விமானத்தில் சிலியின் பிரபல கிறீன் கிராஸ் என்ற கால்பந்து அணியின் வீரர்கள், பயிற்சியாளர் உள்ளிட்டோர் இருந்தனர்.

இதனிடையில் சான்டியாகோவில் இருந்து 300 கி.மீ. தொலைவில் உள்ள மாலே பகுதியில் உள்ள மலையில் இந்த விமானத்தின் பாகங்கள் இருந்ததாக மலையேறும் வீரர்கள் அரசுக்கு தெரிவித்துள்ளனர்.

மலையில் சுமார் 10 ஆயிரம் அடி உயரத்தில் விமானத்தின் பாகங்களும், மனித எலும்புகளும், பல்வேறு பொருள்களும் சிதறிக்கிடந்தன. மலையேற்ற வீரர்கள் இதை வீடியோவாக படம் பிடித்து அரசுக்கு கொடுத்துள்ளனர்.

## ஸ்ரீரங்கத்தில் வன்முறை விஜயகாந்த் கண்டனம்



ஸ்ரீரங்கத்தில், வன்முறையைக் கையில் எடுத்த ஆளும் கட்சியினரை கைது செய்ய வேண்டும். வன்முறையால், பாதிக்கப்பட்டவர்களுக்கு, சம்மந்தப்பட்டவர்களிடம் இருந்து இழப்பீடு பெற்றுத்தர தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலில் போட்டியிடும் பா.ஜ., வேட்பாளரையும், அக்கட்சி நிர்வாகிகளையும், மா.கம்யூ., வேட்பாளரையும், அக்கட்சி நிர்வாகிகளையும், ஆளும்கட்சியினர் தாக்கியுள்ளனர். இதுமுற்றிலும் சட்டத்திற்கு புறம்பான செயலாகும். இதை நான் கடுமையாக கண்டிக்கிறேன். வன்முறையைக் கையில் எடுத்த ஆளும்கட்சியினரை உடனடியாக கைது செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக இழப்பீடு பெற்றுத, தேர்தல் ஆணையகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

# உக்ரைன் யுத்த விவகாரம் துப்பாக்கி முனை தீர்வாகாது

## ரஷ்யாவுக்கு ஒப்பாமா எச்சரிக்கை

உக்ரைன் நாட்டில் அரசுக்கு எதிராக ரஷ்ய ஆதரவாளர்கள் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ரஷ்யா இராணுவ உதவிகள் செய்து வருகிறது. இதனால் உக்ரைனில் உள்நாட்டு போர் மோசமான நிலையை எட்டியுள்ளது.

ரஷ்யாவுக்கு ஐரோப்பிய நாடுகள் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன. அதேநேரத்தில் இந்த பிரச்சினைக்கு சுமூக தீர்வு காணவும் முயற்சி நடந்து வருகிறது. இதற்காக ஜேர்மனி அதிபர் மார்க்கல் சமாதான தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் அமெரிக்கா சென்று அதிபர் ஒபாமாவை சந்தித்து பேசினார். அதைத் தொடர்ந்து இருவரும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது ஒபாமா கூறியதாவது,

உக்ரைன் பிரச்சினையில் சுமூக தீர்வுகாண வேண்டும் என்பதே எங்கள் விருப்பம் ஆகும். ஆனால் ரஷ்யா துப்பாக்கி முனையில் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என நினைக்கிறது.

ஒரு போதும் துப்பாக்கி முனையில் எதையும் சாதிக்க முடியாது. ரஷ்யா ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளில் மாற்றி அமைத்து விடலாம் என முயற்சிக்கிறது.

இதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இப்போது கூட ரஷ்யாவுடன் மோதல் போக்கை யாரும் விரும்பவில்லை. அமைதியான முறையில் பேசி தீர்க்கவேண்டும் என்றே நினைக்கிறோம். அதற்கான ஒத்துழைப்பை ரஷ்யா வழங்கவேண்டும்.

ரஷ்யா மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இதுவரை நினைக்க வில்லை. அதே நேரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை வேரோடு அழிப்போம்

## களமிறங்குகின்றனர் யாஸிதி மக்கள்

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை எதிர்கொள்ள குர்திஷ் படைகளிடம் யாஸிதி இன மக்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஈராக்கின் சிஞ்சார் (Sinchar) மலைப்பகுதியில் வசிக்கும் சிறுபான்மையினத்தவரான யாஸிதி மக்களில் பல்லாயிரக்கணக்கானோரை கடந்தாண்டு ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் படுகொலை செய்துள்ளனர்.

மேலும் யாஸிதி இன சிறுமிகளும் பெண்களும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளால் பாலியல் அடிமைகளாக்கப்படுகிற கொடூரமும் நடந்தேறி வருகிறது.

யாஸிதிகளுக்கு நேர்ந்த கொடுமைகளைத் தொடர்ந்தே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான வான்வழித் தாக்குதலை நடத்த அமெரிக்கா முன்வந்தது.

இந்நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் அமெரிக்க ஆதரவுடன் களத்தில் இருக்கும் குர்திஷ் மாகாணத்தின் அரசு படைகளுடன் யாஸிதிகள் கை கோர்த்துள்ளனர்.



தற்போது யாஸிதிகளுக்கு குர்திஷ் படையான பெஷ்மெர்கா (Peshmerga) இராணுவ பயிற்சி அளித்து வருகிறது.

எனவே இனி ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக யாஸிதி இராணுவமும் களமிறங்க உள்ளதால், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு கடும் நெருக்கடி உருவாகும் சூழ்நிலை இருப்பதாக கூறப்படுகிறது.

# அரசியல் கைதிகளின் விபரங்கள் உடன் பதிவு செய்யக் கோரிக்கை

அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்களையும் பதிவு செய்யும்படி தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு, இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் தமிழ் கைதிகளினதும் விபரங்களை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது. நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலை வீச்சினை விரைவுபடுத்தும் பொருட்டு கைதிகளின் பெற்றோர், உறவினர் மூலம் சரியான, முழுமையான தகவல்களைத் திரட்டி வருகின்றோம். அதற்கு ஏற்ப வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களில் அதற்குரிய விபரப் படிவம் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மேலும் கிழக்கு மாகாணம் கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் ஒன்றியத்தின் செயலாளர் (077 183 8541) உடன் தொடர்பு கொண்டு படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புமாறு ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது. மேலதிக விபரங்களை செயலாளர் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். தமது சமூகத்திற்காக குரல் உயர்த்தி நீண்ட நெடுஞ்சிறை வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் வாழ்வின் விடிவினை ஏற்படுத்துவதற்கு "ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் - நம் உறவுகளை மீட்போம்"எனும் கோட்பாட்டுடன் செயறபடுவதே இந்த அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவினர் ஒன்றியத்தின் குறிக்கோளாகும்.

இது தவிர எவ்வித அரசியல் நோக்கமோ அல்லது வேறு எந்தத் தரப்பினரின் தூண்டுதலோ, நிதி மற்றும் பொருளாதார கையாள்கையோ எமது செயற்பாட்டுக்குக் காரணம் அல்ல என்பதைப் பொறுப்புடன் பதிவு செய்கிறோம். மேலும் எமது மனிதாபிமான, ஜனநாயக செயற்பாட்டை அரசாங்கத்துக்கு எதிரானது என்று தவறாக கற்பிதம் செய்து கொண்டு யாரும் இடையூறு செய்யவோ, அச்சுறுத்தவோ கூடாது என்பது எமது தாழ்மையான வேண்டுகோளாகும். எமது மனிதநேய நடவடிக்கைக்கு மாவட்ட ரீதியிலான சிவில் சமூகம் மற்றும் பிரஜைகள் குழு ஆகியோரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்கிறோம் என்றுள்ளது.

# முகமாலையில் மீள்குடியமர்வு 243 குடும்பங்கள் விருப்பம்

கிளிநொச்சி, முகமாலைப் பகுதியில் மீளக்குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 1,220 பேர் பதிவு செய்துள்ளதாக பளை பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத பகுதிகளில் ஒன்றான முகமாலையில் தற்போது வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முகமாலையை சேர்ந்த 103 குடும்பங்களைச் சேர்ந்த 339 பேரும். இத்தாவில் பகுதியை சேர்ந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேரும். வேம்பொடுகேணி பகுதியை சேர்ந்த 130 குடும்பங்களைச் சேர்ந்த 842 பேருமே இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர் என அந்தத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2014ஆம் ஆண்டு இறுதிக்குள் முகமாலையில் மக்கள் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறப்பட்ட போதும், வெடிபொருட்கள் முழுமையாக அகற்றப்படாமையால் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்பாசி வளர்ப்புக்கு ஊக்கம் ஐம்பது பேருக்கு கொடுப்பனவு

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகப்பிரிவின் இரணைமாதா நகர் கிராமத்தில் கடற்பாசி வளர்கும் திட்டத்துக்கு தெரிவாகிய 50 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலக உத்தியோகத்தர் ச.சலீபன் நேற்றுத் தெரிவித்தார்.

இதற்கான நிதி ஒதுக்கீடு முன்னைய அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஒதுக்கப்பட்டு, தற்போது சமுர்த்தி அமைச்சால் வழங்கப்பட்ட நிதியை, பூநகரி பிரதேச செயலர் சி. சத்தியசீலன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

கடற்பாசி வளர்க்கும் திட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் வலைப்பாடு, பள்ளிக்குடா ஆகிய கிராமங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது. தற்போது இரணைமாதா நகரிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

கடற்பாசியிலிருந்து பெறப்படும் கரஜினன் எனும் திரவம் மருத்துவ குணம் வாய்ந்தது. இந்தத் திரவம் விலங்குணவுகளுக்கும் பாவிக்கப்படுகிறது. ஹேலீஸ் எனும் தனியார் நிறுவனம் இவ்வாறு உற்பத்தியாகும் கடற்பாசிகளைக் கொள்வனவு செய்து வருகிறது.

இதனால் உற்பத்தியாளர்கள் சந்தைப்படுத்தலை பற்றி எவ்வித பயமுமின்றி கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட முடியும். மீனவர்கள் தங்களின் மேலதிக வருமானத்தை பெறுவதற்காக இந்த கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

## யுத்தகால...

சிங்கள மொழிகளில் வெளியிடப்படும் என்றும், இது வரலாற்று முக்கியத்துவம் மிக்க, தமிழ் மக்களது எதிர்கால நடவடிக்கைகளுக்கான சர்வதேச அரசியல் முன்னெடுப்புக்கான முக்கிய பிரேரணையாக இருக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது, பிரேரணையில் "ஈ.பி.டி.பி." என்ற கட்சிப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட எதிரணி உறுப்பினர் தவநாதன், வரலாற்று முக்கியத்துவம்மிக்க இந்தத் தீர்மானத்தில் அந்த சொற்பதம் நீக்கப்பட வேண்டும் என்று கோரினார். இதனை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அந்த சொற்பதத்தை மட்டும் நீக்க உடன்பட்டார். இதனையடுத்து அனைத்து உறுப்பினர்களும் தமது ஏகோபித்த ஆதரவை வெளிப்படுத்தி, தீர்மானத்தை நிறைவேற்றினர்.

## பிரித்தானிய..

ஜகத் டயஸை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

புதுமாத்தளன் பிரதேசத்திற்கும் பிரித்தானிய பிரதிநிதிகள் விஜயம் செய்துள்ளனர்.

## ஜனாதிபதி...

கள் முன்வைத்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, செயலாளர் நாயகத்தின் இணைப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முஸ்லிம்..

நாடுகள் சபைக்கு ஹக்கீம் அறிக்கை சமர்ப்பித்தார். உண்மையில் அது ஐ.நாவுக்கானது அல்ல.

இலங்கையில் பிரச்சினை இருக்கிறது என்று கூறி இஸ்லாமிய அமைப்புக்களை ஒன்று சேர்த்து தீவிரவாதத்தை வளர்ப்பதே அதன் திட்டம். ஹக்கீமின் கடிதம் தீவிரவாத அமைப்புக்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் உள்ள மதரசாக்களில் தீவிரவாதம் தொடர்பான கல்வி போதிக்கப்படுகிறது. புதிய அரசு அதனை ஆராய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# சட்ட விரோத ஆயுத உற்பத்தி உரிய விசாரணை வேண்டும்

## நாடாளுமன்றில் சஜித் கோரிக்கை

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சட்டவிரோத ஆயுத உற்பத்திச்சாலைகள் காணப்படுவதாக வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையின் சில பகுதிகளில் இவ்வாறான சட்ட விரோத ஆயுத உற்பத்திச்சாலைகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையின் பெலியத்த மற்றும் வீரகெட்டிய பகுதிகளில் காணப்படும் சட்டவிரோத ஆயுத உற்பத்திசாலைகளில் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் போன்ற ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டவிரோத ஆயுத உற்பத்திச்சாலைகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் கோரியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினரால் இந்த ஆயுதசாலை நடத்தப்பட்டு வருவதாக சஜித் பிரேமதாச நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

## தனித்து..

உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமது கட்சிக்கு நாடு முழுவதிலும் சிறந்த அடித்தளம் மற்றும் ஆதரவு உள்ளதாக கூறிய அவர், அதன் காரணமாகவே தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதன்படி தீக்கோப்பை சின்னத்திலேயே அடுத்துவரும் தேர்தல்களில் போட்டியிட முடிவெடுத்திருப்பதாக ஜெனரல் சரத் பொன்சேகா மேலும் கூறினார்.

## எம்மை...

அடுத்த தேர்தலில் தாங்கள் வெல்லவேண்டும் என்பதற்காக தேரர்களை குளிர்விக்க போகின்றவர் போன்றது தான் அவரின் கருத்து. அதை அன்று நான் பொருட்படுத்தவில்லை. இன்று அதை உணர்கின்றேன்.

அண்மையில் மீள்குடியேற்ற அமைச்சரை சந்தித்து வலி. வடக்கு மீள்குடியேற்றம் பற்றி பேசி அதற்கான அங்கீகாரத்தை பெற்று வந்தோம் 6500 ஏக்கரில் 5000ஏக்கரையாவது விடுவிக்க கோரினோம் அதற்கு பச்சைக்கொடியும் காட்டப்பட்டது. ஆனால் ருவான் விஜேவர்த்தன கூறுவதைப் பார்த்தால் ஆயிரம் ஏக்கருக்குள் அனைத்து படையினரையும் அடைக்கப்போகிறார்கள் போல இருக்கிறது. இராணுவத்தை குறைக்க மாட்டோம், முகாம்களை அகற்றமாட்டோம் என்று இராணுவத்திற்கும் சிங்கள மக்களுக்கும் புதிய அரசு கூறுகின்றது. அதேபோல் இராணுவத்தை குறைப்போம், மக்களை மீளக்குடியமர்த்துவோம். முகாம்களை அகற்றுவோம் என்று தமிழ் மக்களுக்கு இப்புதிய அரசு கூறுகின்றது. இது அடுத்த தேர்தலில் வெற்றியடையவேண்டும் என்பதற்காகவே கூறப்படுகின்றது.

அடுத்த தேர்தலில் எங்களது அனுசரணையுடன் நீங்கள் வென்று மீண்டும் பிரதமர் ஆன பின்னர், இராணுவ முகாம்களை அகற்ற உங்களுக்கு வாக்களித்த சிங்கள சகோதரர்கள் விடுவார்களா? நீங்கள் முகாம்களை அகற்ற மாட்டோம் என்று உங்கள் மருமகனை கொண்டு உறுதிமொழி அளித்ததால் தான் வாக்களித்தோம் என கேட்கமாட்டார்க்ளா? அப்போது நீங்கள் எங்களைப் பார்த்து "நாங்கள் என்ன செய்ய சிங்கள மக்கள் இராணுவத்தை குறைக்க முகாம்களை அகற்ற இடமளிக்கிறார்கள் இல்லை" என்று கூற உங்களுக்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? என ரணில் விக்ரமசிங்கவிடம் நான் கேட்கின்றேன். இதைத்தானே சரித்திரம் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

அன்று "சிங்களம் மட்டும்" என்பதற்காக பண்டாரநாயக்கா 200 புத்த பிக்குமார் கேட்டதற்காக தமிழ் மொழிப்பிரயோகம் என்ற சட்ட வரைவை ஒழித்தார் இதனை ரணில் விக்ரமசிங்க உணர வேண்டும்.

அண்மையில் நிஷா பிஸ்வால் அம்மையாருடன் பேசியபோது, அமெரிக்காவுக்கு சகாயமான அரசாங்கம் என்ற முறையில் இலங்கை அரசுக்கு அனுசரணையான விதத்தில் அமெரிக்கா நடந்து கொள்ள விரும்புகிறது. என்பதை புரிந்து கொண்டேன்.

ஜெனிவா அறிக்கை காலம் தாழ்த்தி வெளியிடப்பட்டால் சிங்கள மக்களிடையே கொந்தளிப்பைத் தவிர்த்து அதே அரசு மீண்டும் பதவிக்கு வரச்செய்யலாம் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு ஜெனிவாத் தீர்மானம் உரிய காலத்தில் வெளிவருவதே உகந்தது என்பது எமது கருத்து. முன்னர் தீர்மானிக்கப்பட்ட மார்ச் மாதத்தில் தீர்மானம் வருவதை நிஷா அம்மையார் ஏற்கவில்லை.

அதற்கு, தாமதம் சிங்கள வாக்குகளை பெற உதவும் என்று நினைக்கிறீர்கள் ஆனால் தாமதம் தமிழ் வாக்குகளை புறக்கணிக்கும் தன்மையது என்பதை மறக்க வேண்டாம் என தெரிவித்தேன்.

இவ்வளவு நடந்தேறியும் அரசியல் சதிராட்டத்தில் குளிர் காயவே அரசியல் வாதிகள் எத்தனிக்கிறார்கள் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

## சுகாதார...

சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைகளில் தாய் - சேய் நலம் பேணுதல், டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களில் கடமையாற்றி வந்துள்ளனர்.

சுகாதார பணியாளர்கள் என்ற நியமனத்துடன், நாளாந்தம் 300 ரூபா என்ற அடிப்படையில் மாதாந்தம் 6 ஆயிரம் பெற்று வந்த தமக்கு பொருளாதார நெருக்கடியில் இந்த வேதனம் பற்றாக் குறையாகஇருப்பதனால் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த 2013 ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த தம்மை நிரந்தர நியமனம் வழங்குவதற்கான ஆவணங்கள் இதுவரையில் செய்யப்படவில்லை. அந்த வகையில், புதிய ஜனாதிபதி 180 நாட்களுக்கு மேலாக வேலை செய்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கூறியிருக்கும் நிலையில் தமக்கு நிரந்தர நியமனம் இதுவரையில் வழங்கப்படவில்லை.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வடமாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினை சந்திப்பதற்காக 4 வாரங்கள் அலுவலகத்திற்கு வருகை தந்தும் அமைச்சரை பார்க்க முடியவில்லை. அதனால் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறும் அவ்வாறு தமக்கு நிரந்தர நியமனம் வழங்காவிட்டால் தமது போராட்டம் தொடரும் என்றும் கூறினார்கள். (25)

# நூறு நாள் திட்டத்தில் படையினருக்கு இடமில்லை

## அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிப்பு

100 நாள் வேலைத்திட்டத்தில் இராணுவத்தினரையும் அரசியல்வாதிகளையும் ஈடுபடுத்தாது அரச உத்தியோகத்தர்களை மட்டுமே பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மீன்பிடி அமைச்சர் யோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புதிய கட்டடத் தொகுதியினை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. இன்றைய நாளில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மாவட்டச் செயலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் நான் மகிழ்வடைகின்றேன்.

எங்களுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 130,000 மக்கள் வாழ்ந்து வருவதாக அறிகின்றேன். நூற்றுக்குப் பதின்மூன்று வீதமானவர்கள் சிங்களவர்களாகவும், ஒன்பது வீதமானவர்கள் முஸ்லீம் மக்களாகவும், 78 வீதமானவர்கள் தமிழர்களாகவும் வாழ்ந்துவருகின்றனர்.

வாழ்வாதாரத்தில் 75 வீத மானவர்கள் விவசாயத்திலும் 15 வீதமானவர்கள் கடற்றொழிலையும் நம்பி வாழ்கின்றனர். தற்போது இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பாக எனக்கு விளக்கமளித்த இராணுவ அதிகாரிகளுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே போன்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகள். 130,000 மக்கள் வாழ்கின்ற இம்மாவட்டத்தில் 10000 பேர் அரச உத்தியோகத்தர்களாக உள்ளனர்.

இராணுவத்தில் கடமையாற்றுபவர்களும் 9000 பேர் உள்ளனர். எல்லோரும் ஒன்றுசேர்ந்த புதிய அரசை புதிய ஒரு நிர்வாகத்தினை ஏற்படுத்துவதற்கான பாடுபட்டு அதன் பலனை இன்று காணக்கூடியதாகவுள்ளது. எமது அரசு நடைமுறைப்படுத்தும் 100 வேலைநாள் திட்டமென்பது மக்களுக்கு நல்ல நிலையினை உருவாக்கி வருகின்றது. பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதன் காரணமாக மக்களின் வாழ்க்கைச் சுமை குறைக்கப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார். (160)

# பலஸ்தீன உயர்ஸ்தானிகர் அமைச்சர் ராஜிதவுடன் சந்திப்பு



இலங்கைக்கான பாலஸ்தீன உயர்ஸ்தானிகர் எம்.எச். தார் ஷாஹிட்டுக்கும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித்த சேனாரத்னவிற்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவு .தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கையில் நிலவும் இலவச மருத்துவச் சேவை குறித்து தற்போதைய அரசுக்குப் பலஸ்தீன உயர்ஸ்தானிகர் பாராட்டு தெரிவித்தார்.

மேலும் இலவச மருத்துவச் சேவையை மேம்படுத்த தேவைக்கான உதவிகளை தாம் வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

# ஊதிய உயர்வில் முறைகேடு மின்சாரசபைக்கு எதிராக முறைப்பாடு

இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளது.

இலங்கை மின்சார சபை நிர்வாகம் முறையற்ற விதத்தில் சம்பளத்தை உயர்த்திக் கொண்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பிரதம செயலாளர், ரஞ்சன் ஜயலால் இதுபற்றித் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டு சம்பள உயர்வு தொடர்பிலான நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. இலங்கை மின்சார சபையின் முன்னாள் பொது முகாமையாளர், தேர்தல் தினத்தன்று அதாவது ஜனவரி 8ஆம் திகதி, நவம்பர் 27 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நிர்வாகிகளின் சம்பளத்தை மாத்திரம் 70 வீதம் முதல் 124 வீதமாக உயர்த்திக்கொண்டுள்ளார்.

எனவே, நல்லாட்சிக்காக உருவாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு உள்ளேயே இலங்கை மின்சார சபையும் உள்ளது. இலங்கை மின்சார சபை வேறொரு தீவுக்கு சொந்தமானதா என்ற சந்தேகம் எமக்குள்ளது. எனவே, இந்த ஊழலுக்கு எம்மால் சந்தர்ப்பம் வழங்க முடியாது. என்றார்.

# மாணவன் மீது ஆசிரியர் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் உயர்தர மாணவன் மீது அப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இத்தாக்குதல் காரணமாக காயமடைந்த மேற்படி மாணவன் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தப் பாடசாலையின் உடற்பயிற்சி மைதானத்திலேயே இந்தத் தாக்குதல் இடமபெற்றிருக்கிறது. இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டிருக்கிறது. (18)

# கோமகனின் விடுதலை கோரி கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வைத்து 2010 இல் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர் முருகையா கோமகனை விடுதலை செய்யக் கோரி முன்னாள் மாநகரசபை உறுப்பினர் முருகையாக கோமகனின் விடுதலைக்கான மக்கள் அணியினர் மகஜர் ஒன்றை வடமாகாண முதலமைச்சரிடம் சமர்ப்பித்ததுடன் வடமாகாண சபையின் முன் கவனயீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

நேற்று நண்பகல் வேளையில் வடமாகாண சபையின் கட்டடத் தொகுதிக்கு முன்னால் இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

அரசியல் கைதியான இவரை விடுவிக்கக்கோரி முன்னாள் ஜனாதிபதிக்கு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மாற்றம் வேண்டி ஜனாதிபதியாக தற்போதுள்ள ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன நீண்டகாலம் சிறை வாழ்வை அனுபவிக்கும் சுமார் 320 தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அசுத்த நீர் விநியோகம் வலி.வடக்கு தவிசாளருக்கு அழைப்பாணை

(சுன்னாகம்)

வலி.வடக்கு, வலி.தெற்கு மற்றும் வலி.தென்மேற்கு போன்ற பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ள நிலையில் வலி.வடக்கு பிரதேச சபையினர் தமது பிரதேச சபைக் கிணறுகளில் இருந்தே மக்களுக்கு குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பிலேயே வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தனை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளரின் பணிப்பின் பேரிலேயே குடிநீரைத் தாம் விநியோகித்ததாக சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். ஆனால், வடக்கு மாகாண சபையின் தூய நீருக்கான செயலணி நடத்திய கலந்துரையாடலில், குறித்த கிணறுகளில் இருந்து நீரை மக்களுக்கு வழங்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கில், மல்லாகம் சந்தை, பிரதேச சபை வளாகம், கீரிமலை கூவில், மாவிட்டபுரம் ஆகிய பிரதேசத்திலுள்ள கிணறுகளில் இருந்து பொதுமக்களுக்கான நீர் விநியோகிக்கப்படுகின்றது.

இந்தக் குடிதண்ணீர் மக்களுக்கு ஆரோக்கியமானது அல்ல என்றும் அதனை நிறுத்துமாறும் சுகாதாரப் பிரிவு விடுத்த கோரிக்கையை புறந்தள்ளி பிரதேச சபையின் செயற்பாட்டைத் தொடர்ந்தே, சுகாதாரத் துறையால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

# இந்தியப் படகுகளை மீட்க தொடர்கிறது நடவடிக்கை

(கொழும்பு)

வட்க்கு கடலில் பறிமுதல் செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிப்பதற்கான சட்ட செலவுகளை ஏற்றுக்கொள்ள தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, படகுகளை விடுவிப்பதற்கான சட்ட ஒழுங்குகளை முன்னெடுக்குமாறு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹாவிற்கு தமிழக மீன் வளத்துறை செயலாளர் எஸ்.விஜயகுமார் நேற்று முன்தினம் கடித மொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தமிழக மீனவர்களின் 81 படகுகள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கையூடாக படகுகளை விடுவிக்கும் வகையில் சட்டத்தரணி ஒருவரை நியமிக்குமாறு படகு உரிமையாளர்கள் சிலர் அண்மையில் தமிழக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே தமிழக மீன்வளத்துறை செயலாளர் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சட்ட நடவடிக்கைக்கான செலவை தமிழக அரசாங்கம் வழங்கும் எனவும் எஸ்.விஜயகுமார் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் குறித்து மேற்பார்வை செய்வதற்காக இராமேஸ்வரம் மீன்வளத்துறை பிரதிப் பணிப்பாளர் மற்றும் மீன்வளத்துறை ஆய்வாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரின் தமிழக தொடர்பாட்டாளர் கூறியுள்ளார்.

# விமலின் மனைவி மீது விசாரணைகள் பூர்த்தி

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச, தனது கடவுச்சீட்டுக்கு பொய்யான தகவல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பான இரகசிய பொலிஸாரின் விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

சசியின் சாதாரண கடவுச் சீட்டில் பிறந்த வருடமாக 1967 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இராஜதந்திர கடவுச்சீட்டில் பிறந்த வருடமாக 1971 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், இவ்விரு கடவுச் சீட்டுக்களிலும் மாறுபட்ட பெயர்களே குறிப்பிடப்பட்டுள்ளன. இவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டன..

இது தொடர்பில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் சகாதேவசங்கரி



(ஓய்வுபெற்ற பதில் முகாமையாளர் மங்கள் வங்கி யாழ்ப்பாணம்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி சிவன்கோவிலடி தெற்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சகாதேவசங்கரி அவர்கள் 10.02.2015 நேற்று மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் இரத்தினம் தம்பதியினரின் மகனும், கமலநேத்திரா (யாழ். இந்து மகளிர் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியை சங்கரி மிஸ்) அவர்களின் பாசமிகு கணவரும், கஜதேவசங்கரி (லண்டன்) யாதவசங்கரி (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும், Dr. காவேரி (லண்டன்) தர்சினிமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல் :**
**வீரசிங்கம் ஆனந்தசங்கரி**
**(சகோதரன்), 021-222-2289**

(இ)

இபபததரிகை இல.373 பரதான வதி, யாழபபாணம எனனும முகவரியல அமைநதுளள அறபுதன அசசகததல 2015 பெபரவரி 11 ஆம தகதி அசசிடடு வெளியிடபபடடது.